இறுகத் தழுவி, தீர்த்தமும் ஆசனமும் கொடுத்து மரியாதை செய்து, நல்வரவு கூறினார்.

அகஸ்தியர் இராமருக்கு அதிதிபூசை செய்தல்.

இராமர் உட்கார்ந்தவுடன் அகஸ்தியர் தமது வைஸ்வதேவம் முதலிய கிரியைகளைச் செய்து முடித்து, இராமாதிகளுக்கு அர்க்கியங்கொடுத்து, ஆசமனீயம் புஷ்பம் முதலியவைகளால் அவர்களுக்கு அதிதிபூஜை செய்து, வானப்பிரஸ்தாச்சிரம விதிப் பிரகாரம் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய கந்தமூலங்களாகிற போஜனத்தைக் கொடுத்தார். பிறகு, முனிவர் முதலில் உட்கார்ந்து கொண்டு, கைகூப்பி உட்கார்ந்த, எல்லாத் தருமங்களையு மறிந்த இராமரைப்பார்த்து "ஓ காகுத்த, தபசி தனது அக்கினிகாரியங்களைச் செய்து முடித்து அதிதியை அர்க்கியங்கொண்டு உபசரிக்கவேண்டும். அப்படிச் செய்யாவிடில் அத்தபசி அடுத்த உலகத்தில் பொய்ச்சாட்சி சொன்னவன்போல் தனது மாமிசத்தைத் தானே புசிப்பான். எவ்வுலகத்துக்கும் அரசராய், தருமவானாய், மஹாரதராய், எல்லாராலும் வணங்கவும் சம்மானிக்கவும் தக்கவராய் உள்ள தாங்கள் எனக்குப் பிரியமான அதிதியல்லவா" என்றுசொல்லி, தன்னன்பிற் கிசையப் பழங்களாலும் கிழங்குகளாலும் புஷ்பங்களாலும் இன்னும் மற்றவைகளாலும் இராகவரை உபசரித்து மறுபடியும் அவரைநோக்கிச் சொல்லுவாராயினார்: "ஓ புருஷ சிரேஷ்டரே, இதோ வெகு பெரியதாகப் பொன்னும் மணியும் இழைக்கப்பட்டுக் காணப்படுகிற இந்தத் திவ்ய தனுசு விஷ்ணுவினுடையது; விசுவகர்மாவால் இயற்றப்பட்டது. ஒருபொழுதும் தவறுதலில்லாத

அகஸ்தியர் இராமருக்கு ஆயுதம் கொடுத்தல்.

சூரியன்போல் பிரகாசிக்கும் இந்தப்பாணம் அஸ்திரங்களுக்குள் உத்தமமானது; பிரமதேவரால் கொடுக்கப்பட்டது. இவைகளையன்றி என்றும் குன்றாத கொழுந்துவிட்டெரியும் அக்கினி

போல் விளங்கிக்கொண்டிருக்கும் பாணங்களால் நிரம்பிய இரண்டு அம்பறாத்தூணிகளும் என்னிடம் இருக்கின்றன. இவைகள் எனக்கு இந்திரனால் கொடுக்கப்பட்டன. இன்னும் தங்கப்பிடிபோட்டுத் பொற்கூட்டில் வைக்கப் பட்டிருக்கும் வாளொன்று இதோ இருக்கிறது. இந்தத் தனுசைக்கொண்டுதான் விஷ்ணுபகவான் அசுரர்களை யெல்லாம் போரில் வெற்றிகொண்டு தேவர்களுடைய பெரும்பாக்கியம் என்றென்றைக்கும் கேடின்றி விளங்கும் படி வைத்தார். இந்த வில், இந்த அம்பறாத்தூணி, இந்த அஸ்திரம், இந்த வாள், இவைகளைத் தாங்கள், இந்திரன் வச்சிராயுதத்தைக் கைப்பற்றுவதுபோல், வெற்றியடையும் பொருட்டுக் கைப்பற்றுங்கள்." இவ்வண்ணஞ் சொல்லி, முக்காலங்களையு மறிந்த, மகாகாந்தியால் விளங்கும் அகஸ்தியமுனிவர் அவ்வுத்தமமான ஆயுதங்களெல்லாவற்றையும் இராமருக்களித்து மறுபடியும் அவரைப் பார்த்துப் பின்வருமாறு மொழிந்தார்.

பதின்மூன்றுஞ்சருக்கம்.

இராமர் பஞ்சவடிக்குப் புறப்படுதல்.

"ஓ இராமா, தங்களைக்கண்டு நான் மிக்க சந்தோஷமடைந்தேன். தங்களுக்கு க்ஷேம முண்டாகக்கடவது. லக்ஷ்மணா, உங்கள் வரவாலும் நான் மிகக் களித்தேன். என்னை வணங்கவேண்டுமென்றே நீங்கள் சீதையுடன் இவ்விடத்துக்கு எவ்வளவு சிரமப்பட்டு வந்தீர்கள். நீங்களெல்லாரும் வெகு தூரத்திலிருந்து நடந்து வந்தபடியால் உங்களுக்கு வெகு சிரமமாயிருக்கும். ஜனகமகாராஜாவின் திருமகளான சீதை கொஞ்ச மிளைப்பாற விருப்பப்படுவதாகத் தோற்றுகிறது. இவள் வெகு சிறு பெண்; போதெனப்பொலியும் மேனியு

டையள்; கஷ்டத்தையறியாதவள்; கணவன்மேல் வைத்த அன்பால் தூண்டப்பட்டுத் துன்பங்கள் நிரம்பியிருக்கும் இக்காட்டுக்கு வந்திருக்கின்றாள். இவள் தங்களைக் காட்டுக்குத் தொடர்ந்துவந்ததனால் மாதர்களுக்கு அசாத்தியமான காரியத்தைச் செய்கிறாள். ஆகையால், இராமா, அவள் சந்தோஷத்திற்கு ஒருவித குறைவுமில்லாதபடி தாங்கள் நடந்துகொள்ளவேண்டும். உலகமுண்டான காலம்முதல், விசேஷமாக மாதர்கள் தங்கள் கணவர்கள் நல்ல ஸ்திதியிலிருக்கும் வரையில் அவர்களிடம் சந்தோஷமாகவிருந்து, அவர்கள் தளர்வெய்திய காலத்து அவர்களைக் கைவிடுகிறார்கள். மின்னலின் நிலையாமை, ஆயுதங்களின் கூர்மை, கருடாநிலர்களின் வேகம், இம்மூன்று குணங்களும் மாதர்களிடம் ஒருங்கே சேர்ந்திருப்பதால், அவர்கள் தங்கள் புருஷர்கள் கஷ்டப்படுங்காலத்தில் அவர்களை விட்டு நீங்குவார்கள். ஆனால், தமது மனைவியாகிய சீதையோ, இவ்வித தோஷங்களொன்றுமில்லாமல் விளங்குகிறாள்; அருந்ததீ தேவிபோலப் பலவித உத்தம குணங்கள் பொருந்தி, எல்லாராலும் புகழப்பட்டவளாக இருக்கிறாள். சத்துருக்களை அடக்கும பராக்கிரமமுள்ள இராமா, தாங்களும் லக்ஷ்மணரும் சீதையும் இங்கு வந்தபடியால் இந்தப்பிரதேசம் மிக்க அழகைப்பெற்று விளங்குகிறது.” இவ்வண்ணம் அகஸ்தியமாமுநிவர் சொல்ல இராகவர் அஞ்சலிசெய்து கொழுந்துவிட்டெரியும் அக்கினி போலப் பிரகாசித்துக்கொண் டிருந்த அம்முநிவரைப் பார்த்து “ஐயா, முநிபுங்கவராகிய தாங்களே என்னிடத்தும், என் தம்பி, என் மனைவி, இவர்களிடத்தும் இருக்குங் குணங்களைக்கண்டு வியந்ததனால் நானின்றுமுதல் வெகு பாக்கியமும் அனுக்கிரகமும் பெற்றவனானேன். தாங்கள் இப்பொழுது நான் பர்ணசாலை கட்டிக்கொண்டு சுகமாக வசிக்கத்தக்கதான நல்ல நீர்வளமுள்ளதும் அழகான காடடர்ந்.

இராமர் வசிக்க இடம் வினவல்.

தனும் ஆகிய ஓரிடத்தை அருளிச்செய்யவேண்டும்" என்றனர். இவ்விதமாக இராமர் சொன்னதைக்கேட்ட முனிவர்களுக்குள் உத்தமரும் தர்மாத்துமாவுமான அகஸ்தியர் கொஞ்சநேரம் யோசித்து, வெகு பிரியமாக "இங்கிருந்து இரண்டுயோசனைதூரத்தில், அநேக பலமூலங்கள் நிரம்பி, பற்பல மான்கள் கொஞ்சிவிளையாடும் பஞ்சவடி என்று பெயர்போன ஒரு அழகான பிரதேசம் இருக்கிறது. அங்கே போய் அவ்விடத்தில் ஓர் ஆச்சிரமபதத்தை ஏற்பாடு செய்துகொண்டு லக்ஷ்மணரோடு வெகு சுகமாகப் பிதிர் வாக்கிய பரிபாலனம் பண்ணிக்கொண்டு வாசஞ்செய்க. தசரதமன்னர் தாங்கள் அரணியவாசம் பண்ணவேண்டுமென்று குறிப்பிட்டகாலம் அநேகமாய்க் கழிந்துவிட்டது. வெகுசீக்கிரமாக மற்றைக் காலமும் கழிந்தவுடன் விரதத்தை முடித்துக்கொண்டு தாங்கள் தங்கள் இராச்சியத்துக்குச் சென்று வாழலாம். இராமா, மன்னவராகிய தங்கள் தந்தை ஒருவரே வெகுபாக்கியசாலி. யயாதிமகாராஜா பாக்கியம் பெற்றதுபோல் தசரதரும் மூத்தகுமாரராகிய தங்களால் தாம் அளித்தவாக்கை நிறைவேற்றிக்கொண்டார். தங்களையும் தசரதரையும்பற்றிய இந்த விருத்தாந்தங்கள் யாவற்றையும் என் தவத்தின் மகிமையாலும் சினேகத்தாலும் நான் நன்றாயறிவேன். தாங்கள் இவ்விடமே என்னுடன் இந்த ஆச்சிரமத்தில் இருப்பதாகச் சொன்னபோதிலுந் தங்கள் மனத்தின் கருத்தை நான் எனது தவத்தின் மகிமையால் நன்றாக அறிவேனாகையாற்றான் தாங்கள் பஞ்சவடிக்குச் சென்று வசிப்பது நலமென்று நானிப்பொழுது சொல்லுகிறேன். அது வெகு அழகான வனம். தங்கள் வாசத்துக்குத் தகுந்த இடம் அதுவே. அந்தப் பிரதேசத்தைப் பார்த்துச் சீதை வெகு ஆனந்தமடைவள். அது வெகு சிலாக்கியமானது. அது இங்கிருந்து வெகு தூரமுமன்று; கோதாவரி நதிக்கு அருகி

அகஸ்தியர் இடங்கூறல்.

ளுள்ளது. அதைக்கண்டும் வைதேகி சந்தோஷமடை வாள். அவ்விடத்தில் புசிப்பதற்கு வேண்டும் பழங்களுங் கிழங்குகளும் மிகுதியாக உண்டு. அநேகவித பறவைகளும் அவ்வனத்தில் வசிக்கின்றன. அன்றியும், பஞ்சவடி ஒரு வரும் அதிகமாக நெருங்காத ஏகாந்த ஸ்தலமாகவும், புண்ணிய ஸ்தலமாகவும், வெகு ரமணீயமான இட மாகவும் இருக்கிறது. தங்களுக்கு மனைவியுண்டு, அவளைப் பாதுகாக்கச் சக்தியுமுண்டு. பஞ்சவடியில் வசித்துக் கொண்டு தபசிகளாகிற எங்களையுந் தாங்கள் அதுபோ லவே காப்பாற்றி வரவேண்டும். அதோ காண்கிறதே இலுப்பை மரக்காடு, அதற்கு வடபுறமாக ஒரு பெரிய ஆலமரத்தைக் காணும்வரையில் வழிக்கொண்டு சென்றால் அவ்விடத்தில் ஒரு சிறு குன்று எதிர்ப்படும். அதற்கு அயலில் எப்பொழுதும் புஷ்பித்திருக்கும் மரங்கள் அடர்ந்த புகழ்பெற்ற பஞ்சவடியை நீங்கள் காணலாம்" என்று சொல்லினர். இவ்விதமாக அகஸ்தியர் சொல்லவே இராமர் லக்ஷ்மணரோடு அம்முனிவரை வணங்கி அவரிட மிருந்து விடைபெறக் கருதினர். அவ்விருவரும் முனிவ ரிடம் விடைபெற்று அவருக்கு நமஸ்காரம்பண்ணி அவ்வாச்சிரமத்தை விட்டுச் சீதையுடன் பஞ்சவடிக்குப் புறப்பட்டார்கள். அவ்விராஜகுமாரர்கள் விற்களையும் அம்பறுத்தூணிகளையும் எடுத்துக்கொண்டு, அச்சமின்றி, அகஸ்தியமாமுனிவர் சொன்ன வழிவழியே வெகு ஜாக்கிரதையுடன் பஞ்சவடிக்குப் பிரயாணமானார்கள்.

இராமர் பஞ்சவடிக்குப் போதல்.

பதினைன்காஞ்சருக்கம்.

இராமர் ஜடாயுவைக் கண்டது.

பஞ்சவடிக் கேகும்பொழுது இராமர் அதி பராக்கிரமம் பொருந்தியதும் பருத்த உடலையுடையதுமான கழுகொன்

ஜடாயுவைக் காணல்.

றைக் கண்டார். ஒரு பெரும் ஆலமரத்தில் உட்கார்ந்திருந்த அக்கழுகைக் கண்டு இராமலக்ஷ்மணர்கள் அதனை ஓரரக்க னென்று தங்களுக்குள்ளே எண்ணிக் கொண்டு அதைப்பார்த்து "நீ யார்?" என்று கேட்டார்கள். அக்கழுகு அவர்களைப்பார்த்து வெகு மதுரமாகவும் பிரியமாகவும் "என் குழந்தைகளே, நான் உங்கள் தந்தையின் தோழனென்று அறிந்துகொள்ளுங்கள்" என்றது. தமது தந்தையின் தோழன் என்று கேட்ட மாத்திரத்தில் இராமர் அக்கழுகினுக்கு மரியாதை பண்ணி, அதன்மேல், அப்பக்ஷிராஜனுடைய குலத்தையும் பெயரையும்பற்றிக் கேட்டார். இராமர் சொன்னதைக் கேட்டு அப்புள்ளரசு எல்லாப் பிராணிகளுடைய உற்பத்தியையும் தனது பெயரையும் பின்வருமாறு சொல்லிற்று:—

உயிர்த் தோற்றம்.

"இராகவா, முதலிலிருந்து பிரஜாபதிகளா யிருந்தவர்களெல்லாரையும்பற்றிச் சொல்லுகிறேன் கேள். முதற் பிரஜாபதி கர்த்தமர், அவருக்குப் பிறகு விக்கிரீதர், அவர்க்குப் பின் சேஷர், சம்சிரயர், வீரியமுடைய பகுபுத்திரர், ஸ்தாணு, மரீசி, அத்திரி, மகாபலம்பொருந்திய கிரது, புலஸ்தியர், அங்கிரஸ், பிரசேதஸ், புலகர், தக்ஷர், விவஸ்வான்; இவர்களெல்லாரும் பிரஜாபதிகள். இவர்களுக்குப் பின்வந்தவர் மகாகாந்தியுடன் விளங்கிய அரிஷ்டநேமியென்று சொல்லப்படும் காசியபர். தக்ஷ பிரஜாபதிக்கு மிக்க பெருங்கீர்த்திபொருந்திய அறுபது புத்திரிகள் இருந்தார்களென்பதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோமன்றோ? அவர்களில் மெல்லிய இடையுடைய பெண்கள் எண்மரைக் காசியபர் விவாகம் பண்ணிக்கொண்டார். அவர்கள் அதிதி, திதி, தனு, காளிகை, தாமிரை, குரோதவசை, மனு, அனலை என்றுசொல்லப்படுவார்கள். அவர்களிடத்தில் வெகு சந்தோஷமடைந்த காசியபர் அவர்களை

நோக்கி "இம்மூவுலகங்களையும் காத்தற்கு வல்லராகிய என்னைப்போன்ற பராக்கிரமமுள்ள குமாரர்களை நீங்க ளடைவீர்கள்" என்று சொன்னர். அப்படி அவர் சொல்ல அதிதி, திதி, காளிகை மூவர்களுந் தங்களுக்கு அம்மாதிரிக் கீர்த்தியுள்ள புதல்வர்கள் உண்டாவார்களென்று மன வுறுதியோடு களித்திருந்தார்கள். மற்றவர்கள் அவ்வாறு நினைக்கவில்லை. அதிதியினிடமிருந்து பன்னிரண்டு ஆதித் தியர்கள், எட்டு வசுக்கள், பதினேறு ருருத்திரர்கள், இரண்டு அசுவினிகள், ஆகிய முப்பத்துமூன்று தேவர்கள் உண்டானர்கள். இராமா, திதியினிடமிருந்து பெயர் பெற்ற தைத்தியர்கள் பிறந்தார்கள். கடல்சூழ்ந்த காசினி யும் அவர்கள் ஆதீனத்தில்தான் ஆதியில் இருந்தது. பகைவரை அடக்கும் பண்பினனே, தனு அசுவக்கிரீ வன் என்பவனைப் பெற்ருள்; காளிகை நரகன், காலகன் என்பவர்களைப் பெற்ருள்; தாமிரை கிரௌஞ்சி, பாசி, சேனி, திருதராஷ்டிரி, சுகி என்ற ஐந்து கன்னியர்களைப் பெற்ருள. அவர்களுள், கிரௌஞ்சி கோட்டான்களைப் பெற்ருள்; பாசி கோழிகளையும், சேனி வலியுள்ள கழுகு களையும், பருந்துகளையும் பெற்ருர்கள்; திருதராஷ்டிரி அன்னப் பறவைகளையும், சக்கரவாகங்களையும் பெற்ருள். சுகி நதை என்பவளைப்பெற்ருள். நதையின்பெண் விந தை. குரோதவசைக்கு பத்துப்பெண்கள் பிறந்தார்கள். அவர்கள்பெயர் மிருகி, மிருகமந்தை, ஹரி, பத்திரமதை, மாதங்கி, சார்த்தூலி, சுவேதை, சுரபி, சகல லக்ஷ ணங்களும் பொருந்திய சுரசை, கத்ருகை என்பன. ஓ புருஷோத்தமா, மான்களெல்லாம் மிருகியின் குழந் தைகள். மிருகமந்தை பெற்றன கரடிகளும், ஸ்ரமரம் என்ற மான்களும், கவரிமான்களுமாம். ஹரி என்பவ ளிடம் சிங்கங்களும், பலமுள்ள அநேக குரங்குகளும் பிறந்தன. பத்திரமதை இராவதி என்ற பெண்ணைப் பெற்ருள் இவள் இவ்வுலகத்துக்கெல்லாம் யஜமானுக

விருக்கும் ஐராவதமென்ற யானையை ஈன்றாள். மாதங்கி யிடமிருந்து மதயானைகள் ஜனித்தன. சார்த்தூலி கோலாங்கூலம் என்ற குரங்குகளையும் புலிகளையும் பெற்றாள். சுவேதை திக்கஜங்களைப்பெற்றாள். சுரபி என்பவளுக்கு இரண்டு கீர்த்திபெற்ற பெண்கள் பிறந்தார்கள். அவர்கள் பெயர் ரோகிணி கந்தர்வி என்பன. ரோகிணி மாடுகளைப் பெற்றாள். கந்தர்வி குதிரைகளைப் பெற்றாள். இராமா, சுரசை நாகர்களைப் பெற்றாள். கத்ரு பன்னகர்களைப் பெற்றாள். மனு என்பவள் பிராமணா, க்ஷத்திரியர், வைசியா, சூத்திரர் என்று பெயர்பெற்ற மனிதர்களைப் பெற்றாள். அனலை புண்ணியமான பழங்களையுடைய விருக்ஷங்களைப் பெற்றாள். விநதை சுகி என்பவளுடைய பேர்த்தி. கத்ரு சுரசையின் தங்கை. கத்ரு ஆயிரந்தலைகளைக்கொண்டு இவ்வுலகத்தைத் தாங்கும் ஆதிசேஷனைப் பெற்றாள். விநதை கருடன் அருணன் என்ற இரண்டு பிள்ளைகளைப்பெற்றாள். நான் அருணன் புத்திரன். என்பெயர் ஜடாயு. என் அண்ணன் ஸம்பாதி என்பவன். எங்களுக்குத் தாய் சேனி. தங்களுக்கு மனமிருக்கும் பக்ஷத்தில் நான் தாங்கள் வசிக்குமிடத்திலிருந்துகொண்டு தங்களுக்கு என்னால் செய்யக்கூடு முதவிகளைச் செய்வேன். இக்காடு மிக அடர்ந்து மிருகங்களும் ராக்ஷசர்களும் சஞ்சாரம் பண்ணுமிடமாக விருக்கிறது. தாங்களும் லக்ஷ்மணரும் பர்ணசாலையை விட்டு எப்பொழுதாவது வெளியிற்போகும்படி வந்தால் நான் அக்காலத்தில் சீதையைப் பாதுகாப்பேன்".

இவ்வாறுசொன்ன ஜடாயுவை இராமர் உபசரித்துக் களிப்புடன் தழுவி வணங்கி, அதற்கும் தம் தந்தைக்குமுண்டான சிநேகவிஷயமான சங்கதிகளை அது அடிக்கடி சொல்ல அதிகவனத்தோடு கேட்டார். பின்பு அந்தப் பலசாலியான ஜடாயுவினிடம் கொஞ்சநேரம் சீதையைப் பாதுகாக்கும்படி ஒப்பித்துவிட்டு விட்டிற் பூச்சிகளைக்

கொளுத்தும் நெருப்புப்போலச் சத்துருக்களைத் தகிக்கும் பராக்கிரமமுள்ள இராமர் லக்ஷ்மணருடன் பஞ்சவடிக்குச் சென்றார்.

பதினைந்தாஞ்சருக்கம்.

இராமர் பஞ்சவடியில் ஆச்சிரமம் அமைத்து அவ்விடத்தில கொஞ்சக்காலம் வாசம்பண்ணியது.

பிறகு, இராமர் அநேக மான்களும் கொடிய சர்ப்பங்களும் மிருகங்களுஞ் சஞ்சரித்துக்கொண் டிருக்கும் பஞ்சவடி சேர்ந்து, வெகு பராக்கிரமசாலியாகிய தமது தம்பி லக்ஷ்மணரைப் பார்த்து "மகரிஷி அகஸ்தியர் குறித்த இடத்துக்கு நாம் வந்துவிட்டோம். எப்பொழுதும் மலர்ந்திருக்கும் மரங்களடர்ந்த பஞ்சவடி இதுதான். நீ காட்டில் வெகு சாமர்த்தியமாகப் பழகியவனாயிற்றே. நன்றாக நான்கு பக்கங்களிலேயுஞ் சுற்றிப்பார். நமக்கு ஆச்சிரமம் ஒன்று ஏற்படுத்த எவ்விடம் உனக்குப் பிடிக்கிறது? அதை ஆராய்ந்து சொல். எவ்விடத்தில் நீயும் நானும் சீதையும் சந்தோஷமாக வசிக்கலாமோ, எவ்விடத்தில் பூஞ்சோலைகள் நன்றாக அமைந்து சலம் சமீபமாகவும் இடம் பார்ப்பதற்கு வெகு அழகாகவும் இருக்கிறதோ, எவ்விடத்தில் நமக்கு வேண்டிய ஸமித்து, தருப்பை, புஷ்பம் முதலியவைகள் சுலபமாக நமக்குக் கிட்டுமோ அவ்விதமான இடத்தைப் பார்" என்றார். இவ்வண்ணமாக இராமர் சொல்ல லக்ஷ்மணர் கைகூப்பி வணங்கி, சீதை முன்பாகக் காகுத்தரைப் பார்த்து "ஐயா காகுத்தரே, தாங்கள் எனக்கு யஜமானாக இருந்துகொண்டிருக்க நான் எக்காலத்தும் தங்களுத்தரவுப்படி உள்ளடங்கி நடக்க்கடமைப்பட்டவன். சுவயமாக ஒன்றுஞ் செய்ய எனக்

பஞ்சவடியில் இடம் பார்த்தல்.

கதிகாரமில்லே. ஆகையால், தாங்களே அழகான ஒரு இடத்தைப் பார்த்து, 'இவ்விடத்தில் ஆச்சிரமம் செய்' என்று எனக்குக் கட்டளை யிடவேண்டும்" என்றார். இவ்விதமாக மகாத்துமாவாகிய லக்ஷ்மணர் சொன்ன சொற்களைக்கேட்ட இராமர் வெகு சந்தோஷமடைந்து, கொஞ்சநேரம் ஆராய்ந்து, எல்லா வளங்களும் பொருந்திய பிரதேசமொன்றைப் பார்த்து வைத்துக்கொண்டு, அவ்வழகான இடத்துக்கு லக்ஷ்மணரை அழைத்துப் போய், அவர் கையைத் தமது கையால் பற்றி, ஆச்சிரமம் ஏற்படுத்தும் விஷயமாக, "இவ்விடம் சமமாயும் வெகு அழகாயும் மலர் மரங்களால் சூழப்பட்டும் இருக்கிறது. ஆகையால், இவ்விடத்திலே நாம் வசிக்க ஓர் ஆச்சிரமத்தை நீ செய். சூரியன்போல் விளங்கிக்கொண்டு வெகு மனோகரமாகக் கந்தம்வீசும் தாமரைப் புஷ்பங்கள் நிரம்பிய தாமரையோடை ஒன்று சமீபத்தில் இருக்கிறது. அன்றியும் பரிசுத்தரான அகஸ்தியமுனிவர் சொன்னவாறு இங்கே மணம்பொருந்திய மலர்கள் நிரம்பிய மரங்களடர்ந்தும், அன்னங்களும், காரண்டவங்களும், சக்கரவாகங்களும் விளையாடப்பெற்றும், மான்கூட்டங்கள் நிறைந்தும் விளங்குகின்ற அழகான கோதாவரிநதியும் இதோ தான் ஓடுகிறது. அது வெகு தூரமுமன்று; வெகுசமீபமுமன்று. மனோகரமாகச் சப்திக்கும் மயில்கள் பொருந்தியும், உன்னதமாயும், அநேக குகைகள் நிரம்பியும், புஷ்பித்துள்ள அநேக விருக்ஷங்கள் சூழ்ந்தும் இருக்கும் பல குன்றுகள் இதோ நம்மைச் சுற்றிநிற்கின்றன. ஆங்காங்கு காணப்படும் தங்கம், வெள்ளி, தாமிரங்களின் பொடிகளால் இக்குன்றுகள் அநேக வருணங்களால் கோலமிட்டு அலங்கரிக்கப்பட்ட யானைகள் போல் தோற்றுகின்றன. இங்கிருக்குங் காடு ஆச்சா, பனை, தமாலம், பேரீச்சு, பலா, மா, நீவாரம், வேங்கை, புன்னை, கட்டிமா, அசோகம், திலகம், சம்பகம், தாழை, சந்தனம், ஸ்பந்தனம்,

கடம்பு, பனஸம், எலுமிச்சை, தவம், அசுவகர்ணம், கருங்காலி, அரசு, முண்முருக்கு, பாதிரி முதலிய விருக்ஷங்கள் அடர்ந்து புதரோடு கொடிகள் படர்ந்திருக்கிறது. இது வெகு புண்ணியமான இடம்; மிக்க அழகு வாய்ந்தது; அநேக பறவைகளும் மிருகங்களும் நிறைந்திருக்கின்றது. இங்கே நான் இந்தப் பக்ஷியுடன் (ஜடாயு) வசிப்பேன்" என்றார்.

பர்ணசாலை கட்டல்.

இராமர் அம்மொழி புகலலும் பகைவரைவெல்லும் பராக்கிரமமுள்ள வலிமிகுந்த லக்ஷ்மணர் வெகு சீக்கிரமாகத் தமது தமையனார் வசிப்பதற்காக ஓர் ஆச்சிரமத்தை அவ்விடத்தில் அமைத்தனர். நன்றாக மண்சுவரெடுத்து, உயர்ந்த மூங்கில்களால் அழகான பலமுள்ள கம்பங்களை நாட்டி, அரசங்கிளைகளைப் பரப்பிப் பலமாக நாரால் கட்டி, நாணலாலும் விழலாலும் இலைகளாலும் நெருக்கமாக வேய்ந்து, தரையைச் சமமாகதிரவி, ஒரு விசாலமான அழகிய பர்ணசாலையைத் தமது தமையனாராகிய இராகவர் வசிக்கும் பொருட்டு ஒருநொடியில் மகா பலசாலியாகிய லக்ஷ்மணர் கட்டிமுடித்தார். அது ஒப்பற்ற வனப்புடையதாக விளங்கிற்று. அதன்பின் லக்ஷ்மணர் கோதாவரிநதிக்குச்சென்று அதில் ஸ்நானஞ் செய்து தாமரைப் புஷ்பங்களையும் பழங்களையும் பறித்துப் பர்ணசாலைக்குத் திரும்பிவந்தார். பின்னர் அதற்கு லக்ஷ்மணர் புஷ்பங்களால் வாஸ்து பூசை செய்து, சாஸ்திரப்பிரகாரம் தாங்கள் அவ்விடத்தில் க்ஷேமமாக வாசம்பண்ணுவதற்காகச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து முடித்து, இராமரை அழைத்து வந்து தாம் அமைத்த ஆச்சிரமத்தைக் காண்பித்தார். அவ்வாறு கட்டிமுடித்த அழகிய பர்ணசாலையைச் சீதையுடன் இராமர் பார்த்து ஆனந்தக்கடலில் அமிழ்ந்தார். தமது புஜங்களால் லக்ஷ்மணரைத்தழுவி வெகு பிரியமாகவும் கம்பீரமாகவும் அவரைப்பார்த்து இராகவர் "தம்பீ,

நீ இன்று மிகப்பெரியகாரியத்தைச் செய்து முடித்தாய். அதனால் நான் வெகு திருப்தியடைந்தேன். அதற்குக் கைம்மாறு எனது ஆலிங்கனமென்றே எண்ணி நானுன்னைத் தழுவிக்கொண்டேன். இவ்வண்ணம் இங்கிதமறிந்து, நன்றியறிந்து, தருமமறிந்து, நடக்கும் உன்னைத் தனது குமாரனாகப்பெற்ற எனது தந்தை இறந்துவிட்டாரென்று சொல்லத்தகாது" எனப் புகழ்ந்துகூறினர்.

திருவை வளர்க்கும் இராமர் லக்ஷ்மணரை நோக்கி இவ்வாறுசொல்லி அநேக பழங்கள் நிரம்பிய அவ்விடத்தில் வெகு சுகமாகத் தமது ஐம்புலன்களையுமடக்கி வசித்தார். அந்தத் தருமாத்துமா அப்பஞ்சவடி யாச்சிரமத்தில் சீதையும் லக்ஷ்மணரும் சிசுரூஷைபண்ண ஸ்வர்க்க லோகத்தில் இந்திரன் வசிப்பதுபோலக் கொஞ்சக்காலம் வாசஞ்செய்தார்.

பதினாறுஞ்சருக்கம்.

ஒருநாள் பிராதக்காலத்தில ஸ்நானம் பண்ணக் கோதாவரிக்குச் சென்றபொழுது லக்ஷ்மணர் அக்காலத்து ஹேமந்தருதுவை வருணித்தல்; இராமர் பரதரைப்பார்க்க ஆசைப்படல்.

மகாத்துமாவாகிய இராமர் அங்கே சுகமாக வசித்துக்கொண்டிருக்கும்பொழுது சரத்காலங்கழிந்து ஹேமந்தருது தொடங்கிற்று. அக்காலத்தில் ஒருநாள் இரவுகழிந்து பொழுதுவிடியும் வேளையில் பிராதக்காலஸ்நானத்திற்காக இரகுநந்தனர் அழகான கோதாவரிக்குப் போயினர். சீதையோடு இராமருக்குப் பின்னர் வெகுவணக்கமாகக் கையில் கலசமெடுத்துச் சென்ற லக்ஷ்மணர் இராமரைப் பார்த்து "இன்சொலிறைவ, தங்களுக்கு வெகு ஆனந்தமானகாலம் இப்பொழுது வந்திருக்கிறது. இந்த ஹேமந்தருதுவால், இவ்வருஷம் தன்னை அலங்கரித்துக்

பனிக்கால வருணனை.

கொண்டு வருவதுபோல் வெகு அழகாக விளங்குகிறது. ஜனங்கள் உடம்பு இக் காலத்தில்தான் பனியால் வெடித்து வறண்டுவிடுகிறது. புவிமுழுதும் பயிர் நிரம்பி இருக் கிறது. நீரில் படிய இக்காலத்தில் மூனம் வருகிறதில்லை. அனலண்டை உட்காரச் சுகமாகவிருக்கும். இக்காலத் தில்தான் புதுநெல் குத்தி அவ்வரிசியைக்கொண்டு ஹவிஸ் அமைத்து ஆன்றோர் தங்கள் பிதிரர்களேயுந் தேவதை களையும் ஆராதித்துத் தங்கள பாவங்களை ஒழிக்கிறார்கள். நாடெங்கும் இப்பொழுதுதான் எல்லாவிதமான சம்பத்து களும் நிரம்பி விளங்குங் காலம். இப்பொழுது தான் எங்கும் பாலும் தயிரும் நெய்யும் அதிகமாகக் கிடைக்குங் காலம். இக்காலத்திற்றான் வெற்றியை விரும்பிய மன்ன வர்கள் யுத்தத்திற்குப் புறப்படுவார்கள். சூரியன் இக் காலத்தில் தென்திசை சென்றுவிடுகின்றமையால் வட திசை நெற்றியில் திலகமில்லாத பெண்ணைப்போல இருக் கும். எப்பொழுதும் இயற்கையாகவே பனிக்கட்டிக ளால் நிரம்பியிருக்கும் இமயமலையும் இப்பொழுது சூரியன் தென்திசைசென்றுவிடுவதால்தன்பெயருக்கேற்கமுற்றும் பனிமலையாகவே விளங்குங்காலம் இது. இப்பருவத்தில் பகலில் மத்தியான காலத்தில்தான் அலைந்து திரியச் சௌக்கியமாகவிருக்கும்; சூரியகிரணம் மேலேபட இன்ப மாயிருக்கும்; நடுப்பகலிலும் நிழலையும் தண்ணீரையும் அணுகக் கூசும். இக்காலத்தில் எப்பொழுதும் சூரியன் உக்கிரமேயின்றி வெகுசாந்தமாக இருப்பன்; பனிவிழுந்து கொண்டிருக்கும்; ஊசிபோல் குத்தும் குளிர்காற்று வீசும்; காடுகள் பனியால் அநேகமாக மனித சஞ்சாரமின்றி வெறுமை யடைந்து விளங்கும். இக்காலத்தில் ஜனங்கள் மற்றக்காலங்களில் போல் வெட்ட வெளியில் தூங்கமுடி யாது. புஷ்யத்தில் உள்ள பூரணசந்திரன் இக்காலத்தில் உண்டாகும் பனியால் ஒளி மழுங்கியிருப்பன். குளிரதிக

மாகவிருக்கும். இரவுகள் நீடித்திருக்கும். சந்திரனுடைய அழகு சூரியனுக்காய்விட்டது; சந்திரமண்டலம் பனிமூடிச் சிவந்து, மூச்சுப்பட்டு மங்கின கண்ணாடிபோல், இக்காலத்தில் பிரகாசிப்பதேயில்லை. பூரண சந்திரனையுடைய இரவும் பனியால் மூடப்பட்டு, வெயிலிலலைந்து மேனிகறுத்த நமது சீதைபோல, தன்னழகு குன்றி விளங்குகிறது. எப்பொழுதும் இயல்பாகவே குளிர்ந்து வீசும் மேல்காற்று இப்பொழுது பனியுடன்கலந்து இரட்டிப்பான குளிர்ச்சியோடு வீசுகிறது. புகைக்கொப்பான ஆவியால் மூடப்பட்ட காடுகள் சூரியனுதயமாகுங் காலத்தில் கிரௌஞ்சம், சாரசம் முதலிய பறவைகள் கூவ, நன்றாக விளைந்த வாற்கோதுமைகளையும், கோதுமைகளையும் உடையவாய் விளங்குகின்றன. பேரீந்துப் புஷ்பமளவு பருமனுள்ள மணிகள் நிரம்பிய கதிர்களால் நெற்பயிர்கள் கொஞ்சம்வளைந்து தங்கநிறமாகவிளங்குகின்றன. தூரத்திலுதிக்கும் சூரியன் குளிர்ந்த பனியால் சூழப்பட்ட கிரணங்களால் சந்திரனைப்போல் விளங்குகிறான். காலையில் உஷ்ணமின்றியும், மத்தியானகாலத்தில் அனுபவிக்கச் சுகமான உஷ்ணம்பொருந்தியும், கொஞ்சம் சிவந்தும் வெளுத்தும் வெயில் பூமியில் தோற்றுகின்றது. காடுகளில் பனிமூடிய புல்தரைகள் இளம் வெயிலில் வெகு அழகாய்ப் பிரகாசிக்கின்றன. காட்டானைகள் அதிக தாகத்தால் தண்ணீர் குடிக்க நீட்டிய துதிக்கைகளை அந்நீர் அதிக சீதமாயிருத்தலால் உள்ளிழுத்துக்கொள்ளுகின்றன. நீர்ப்பறவைகள் தண்ணீருக்குச் சமீபத்தில் உட்கார்ந்துகொண்டு, மறமில்லாத போர்வீரர் செருவிற்குச் செல்லக் கூசுவதுபோல, நீரிலிறங்கத் துணியாமலிருக்கின்றன. பூவற்றுப் பனித்துளிகளாலும் ஆவியாலும் மூடப்பட்டு அசைவற்று நிற்கும் காட்டுமரங்கள் தூங்குவனபோலக் காணப்படுகின்றன. நதிகள் பனியாவியால் மூடப்பட்டும், சத்தத்தால் ஊகித்தறியப்படும் சக்கரவாகப் பறவைகளை உடையவாகியும்,

பனிநீரால் நனைந்த மணற் குன்றுகள் பொருந்திய கரை களையுடையவாகியும் விளங்குகின்றன. பனிபெய்வதாலும், சூரியனுக்கு உக்கிரத்வமில்லாமையாலும், சீதளத்தாலும், நிர்மலமான மலையுச்சியிலிருந்தபோதிலும் ஜலம் குடிப்ப தற்கு விஷம்போலிருக்கிறது. தாமரை ஓடைகள் உதிர்ந்த தாமரை இதழ்களையும், மகரந்தத்தையும், பனியால் அழுகி யிருக்கும் மலரற்ற காம்புகளையும உடைமையால் கொஞ்ச மேனுஞ் சோபிக்கவேயில்லை. இப்போது புருஷசிம்ம மாகிய பரதர் வெகு துயரப்பட்டுக்கொண்டு தங்களிடம் வைத்திருக்கும் அன்பால் நகரத்திலிருந்து

பரதர் செய்கை.

கொண்டே தவம்புரிந்து கொண்டிருக் கிறார். அவர் இராச்சியத்தையும் தனக் குரிய மரியாதையையும் பலவிதபோகங்களையும் வெறுத்து விட்டு, அரிய தபசியாக, நியமமான ஆகாரத்தைப் புசித்து, குளிர்ந்திருக்கும் வெறுந்தரையில படுத்துத் தனது வாழ் நாட்களைக் கழிக்கிறார். அவரும் இதேகாலத்தில் எழுந்து தமது குடிகள் சூழ ஸ்நானம்பண்ணும்பொருட்டுச் சரயு நதிக்குப் போய்க்கொண்டிருக்கலாம். வெகு சௌக்கியமாக வளர்க்கப்பட்ட மெல்லிய இயல்பையுடைய பரதர் எவ் விதமாக இப்பொழுது குளிர்ந்த சலத்தில் விடியற்கா லத்தில் ஸ்நானம் பண்ணுவாரோ தெரியவில்லை. கமல விதழ்போன்ற கண்கள்பொருந்தி, வெகுபராக்கிரமசாலி யாய், நீலவருணராய், தொந்தியில்லாது கம்பீரமாய் விள ங்கிக்கொண்டு, தருமத்தை நன்றாகவறிந்து, உண்மையே பேசிக்கொண்டு, ஒருவித கெட்டகாரியமும் செய்யாமல் நடுங்கிக்கொண்டு, தமது ஐம்புலன்களையும் அடக்கி, எல் லாரிடமும் அன்பாகவும் இனிமையாகவும்பேசிக்கொண்டு, நீண்டகைகள் பொருந்தி, பகைவரை அடக்கும் திற லுள்ள பரதர் இராச்சியாதிபோகங்கள் எல்லாவற்றையும் துறந்து, முற்றிலுந் தங்களிடமே பிரீதியை வைத்துவிட் டார். காட்டிலிருந்துகொண்டே காட்டிலிருந்து தவம்

புரியுந் தங்களைப் பரதர் தமது தவத்தால் பின்பற்று கிறபடியால் அவர் தமக்குக் கிடைக்கவேண்டிய சுவர்க்க லோகத்தை முன்னரே தேடிக்கொண்டார். உலகத்தில் மனிதர்கள் விசேஷமாகத் தங்கள் தந்தைகள் குணத்தைக் கொள்ளாமல் தங்கள் தாயர்களுடைய குணத்தையே கொள்ளுகிறார்களென்று பிரசித்தமாக வழங்கிவரும் உலக வசனமானது பரதரிடம் பொய்யாகிவிட்டது. தசரத மன்னவரை நாயகராகவும் பரதரைக் குமாரராகவும் உடைய நமது தாய் கைகேயிக்குமட்டும் இந்தக் கொடிய எண்ணம் எவ்விதமாக உதித்தது '' என்றனர்.

வெகு தர்மிஷ்டராகிய லக்ஷ்மணர் அன்பால் இவ்வாறு பேச, இராமர் தாய்மேல் சொல்லிய குற்றத்தைச் சகிக்கமுடியாமல் அவரைப்பார்த்து "தம்பீ, நீ நமது இளையதாயான கைகேயியை ஒருபொழுதும் நிந்திக்கலாகாது. இக்ஷ்வாகு வம்சத்தின் கொழுந்தாகிய பரதனைப்பற்றி இன்னும் வேண்டியமட்டுஞ் சொல். காட்டில் தவம்புரிந்து வசிப்பதில் என்மனமெவ்வளவோ தைரியமாக இருந்தபோதிலும், பரதனிடத்துள்ள அன்பினால் என்புத்தி மயங்குகின்றது. அவனுடைய பிரியமாயும், மதுரமாயும், மனோகரமாயும், அமிருதத்துக் கொப்பாயும், மனத்தைச் சாந்தப் படுத்திவைப்பதில் அதிக ஆற்றலுடையவைகளாயும் உள்ள வசனங்கள் என் மனத்தில் இருக்கின்றன. மகாத்துமாவாகிய பரதனையும் நமது வீரனான சத்துருக்கனையும் நான் எப்பொழுது உன்னுடன் காணப்போகிறேன்'' என்று இவ்விதமாகக் கூறித் துயரப்பட்டுக் கொண்டே கோதாவரி நதிசேர்ந்து தமது தம்பியோடும் சீதையோடும் ஸ்நானம் முதலியவைகளைச் செய்துமுடித்தார். பிறகு அவர்கள் தீர்த்தத்தால் தங்கள் பிதிரர்களுக்கும் தேவதைகளுக்கும் செய்யவேண்டிய தர்ப்பணங்களைச் செய்துமுடித்து உதயஞ்செய்த சூரியனையும் மற்

இராமர் பரதரை நினைத்துத் துக்கித்தல.

றத்தேவதைகளையும் விதிப்பிரகாரம் ஸ்தோத்திரம் பண்ணினார்கள். சீதையைத் தம்பக்கத்தில் வைத்துக்கொண்டு லக்ஷ்மணருடன் ஸ்நானம்செய்து திரும்பின இராமர் நந்திபகவானை முன்னிட்டுக்கொண்டும் பார்வதிதேவியைத் தமது பக்கத்தில் வைத்துக்கொண்டும் ஸ்நானம் செய்துவரும் ருத்திரமூர்த்திபோல் விளங்கினார்.

பதினேழாஞ்சருக்கம்.

பஞ்சவடியில் சூர்ப்பணகை இராமாதிகளைச் சந்தித்தல்.

இராமர் சீதை லக்ஷ்மணர் மூவரும் கோதாவரி நதியில் ஸ்நானஞ் செய்துவிட்டுத் தங்களாச்சிரமத்துக்குத் திரும்பிச் சென்றார்கள். ஆச்சிரமஞ் சேர்ந்து, இராமர் தாம் செய்யவேண்டிய காலக்கடன்களைச் செய்து முடித்துப் பர்ணசாலையுள் நுழைந்தார். அவர் அவ்விடத்தில் மகரிஷிகள் ஆராதிக்கத் தமது தம்பி லக்ஷ்மணரோடு அநேக விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். சீதாதேவியுடன் இராமர் தமது ஆச்சிரமத்தில் வீற்றிருந்தது, சித்திரையோடு சந்திரன் கூடியிருந்ததுபோல் விளங்கிற்று. அவ்விதமாக அவர் பேசிக்கொண்டிருந்த காலத்தில் அரக்கி யொருத்தி தற்செயலாக அவ்விடம் வந்தாள். தசக்கிரீவன் தங்கையாகிய சூர்ப்பணகை அகன்ற மார்பும், அழகிய புஜங்களும், தாமரையிதழ் போன்ற கண்களும், முழங்கால்வரையில் தொங்கும் கரங்களும் உடையவராய் அதிகமாக நின்றொளிரும் முகத்துடன் வீற்றிருந்த தேவர்க்கொப்பான இராமரைக் கண்டாள்.

சூர்ப்பணகை வரவு.

அவருடைய யானைபோன்ற நடையும், சடைமுடியும், அழகும், பலமும், இராஜ லக்ஷணங்களும், குவளை நிறமும், அனங்கனது சாயலும், இந்திரனுக்கொப்பான

வலியும் அவள் மனத்தைக் கவர்ந்தன. இவளுக்கும் அவருக்கும் எவ்வளவு தூரம்? அவரது சுமுகமெங்கே? இவளது துர்முகமெங்கே? அவரது குறுகிய வயிறெங்கே? இவளது சரிந்த பெருத்த வயிறெங்கே? அவரது நீண்ட பெரிய கண்களெங்கே? இவளது விகாரமான கண்களெங்கே? அவருடைய அழகிய குஞ்சியெங்கே? இவளது சிவந்து விரிந்த கூந்தலெங்கே? கண்டோர் மனத்தைக் கவரும் அவரது வனப்பெங்கே? எல்லாரும் நடுங்கத்தக்க இவளது கோரமான உருவெங்கே? அவரது இனியகுரல் எங்கே? இவளது பயங்கரமான குரலெங்கே? அவரது இளமையெங்கே? இவளது மூப்பெங்கே? அவரது இனிய பிரிய வசனமெங்கே? இவளது வன் சொல்லெங்கே? அவரது அறநெறியெங்கே? இவளது மறநெறியெங்கே? இராமரோ அழகுள்ள சுந்தரபுருஷர். சூர்ப்பணகையோ வெகு விகாரமான அரக்கி. இவ்வளவு வித்தியாசங்கள் காமத்தால் கட்டுண்டவர்களுக்குத் தோற்றுமா? ஆகையால், சூர்ப்பணகை இராமரைக்கண்டு மயங்கி, அவரை நோக்கிச் "சடைமுடிதரித்துத் தவவேடம்பூண்டு வில்லேந்திக்கொண்டு மனைவியுடன் ராக்ஷசர்கள் சஞ்சரிக்கும் இந்த இடத்துக்கு ஏன் வந்திருக்கிறீர்? நீர் வந்தகாரணமென்ன? அதின் உண்மையை எனக்குச் சொல்லவேண்டும்" என்று வினவினள். இவ்வாறு அரக்கியாகிய சூர்ப்பணகை தம்மைக்கேட்கவே, எல்லாவிஷயங்களையும் நேரியனவாக எண்ணுங் குணமுள்ள இராமர் அவளைப் பார்த்து "இந்திரனுக்கொப்பான பராக்கிரமம் பொருந்திய தசரதர் என்ற மன்னவரொருவரிருந்தார். நான் அவருடைய மூத்தகுமாரன். என்னை இராமன் என்று சொல்லுவார்கள். அதோ இருக்கிறாரே அவர் என் தம்பி லக்ஷ்மணர். எப்பொழுதும் என்னைச்சார்ந்து நிற்பவர். இவள் என் மனைவி; சீதை இவள் பெயர்.

சூர்ப்பணகை வர்ணனை.

நாங்கள் எங்கள் தாய்தந்தையர்கள் உத்தரவுப்படி அறம் வளர்க்க இக்காட்டிற்கு வந்திருக்கிறோம். நீ யார் என்று அறிய விரும்புகிறேன். நீ யார் மகள்? உன் பெயர் யாது? நீ யாரைச் சேர்ந்தவள்? மனோகரமான உருவமுடைமையால் நீ அரக்கிபோலும். நீ இங்கு வந்தகாரண மென்ன? அதை உள்ளபடி சொல்லவேண்டும்" என்று கூறினர்.

சூர்ப்பணகை இராமரைக் கணவனுகும்படி கேட்டது.

இதைக்கேட்டுக் காமத்தால் வருத்தப்பட்டுக்கொண்டிருந்த சூர்ப்பணகை இராமரைப்பார்த்து "கேளும் இராமரே, நானுண்மையைச் சொல்லுகிறேன். நான் சூர்ப்பணகை என்னும் அரக்கி. இஷ்டப்படி உருவங் கொள்ளுஞ் சக்தி எனக்குண்டு. பார்ப்பவர்கள் உள்ளத்தை நடுங்கச் செய்துகொண்டு நானிந்தக்காட்டில் தனிமையாக எப்பொழுதும் சஞ்சரிப்பவள். இராவணன் என் தமையன். அவன் வெகு பலசாலி; அரக்கர்களுக்கெல்லாம் இறைவன். அவ்வீரன் விசிரவசுவுடைய குமாரன். அவனைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். எப்பொழுதுந் தூங்கிக்கொண்டேயிருக்கும் மகாபலம் பொருந்திய கும்பகர்ணனும், ராக்ஷசகுலத்தில் பிறந்தும் வெகு தர்மாத்துமாவாய் ராக்ஷச குணமேயில்லாத விபீஷணனும், போரில் கீர்த்தி பெற்ற கரனும், தூஷணனுமாகிய இவர்களெல்லாரும் என் சகோதரர்கள். நான் இவர்கள் எல்லாரையும் விட்டுவிட்டு என்னிஷ்டப்படி சஞ்சரிக்க வல்லவள். இராமரே, நான் தங்களைக் கண்டமாத்திரத்தில் தாங்கள் எனக்குப் புருஷனாகவேண்டுமென்று எண்ணங்கொண்டு தங்களிடம் வந்திருக்கிறேன். நான் வெகு பலமுள்ளவள். என்னுடைய மகாபலத்தால் என்னிஷ்டப்படி எங்கும் சஞ்சரிக்கவல்லவள். என்றென்றைக்கும் என் கணவராகத் தாங்கள் ஆகவேண்டும். சீதை உங்களுக்கு என்னசெய்யப்போகிறாள். வெகு விகாரமும் அவலக்ஷணமுமுள்ள

சீதை உங்களுக்குச் சரியான மனைவியல்லள். நான்தான் தங்களுக்கு ஏற்றமனைவி. ஆகையால் நீங்கள் என்னைமனைவி யாக ஒப்புக்கொள்ளுங்கள். மகா விகாரமுள்ளவளும், கெட்டவளும், குரூபியும், சரிந்தவயிறுள்ளவளும், மனி தப்பிறப்பினளுமான இச்சீதையைத் தங்களுடைய தம்பி லக்ஷ்மணனுடன் சேர்த்து நான் புசித்துவிடுகிறேன். அதன்பிறகு என்கணவரே, அநேக மலைகளின் சிகரங்களை யும் அநேக அரணியங்களையும் என்னுடன்கூடப் பார்த்துக் கொண்டு தாங்கள் சுகமாகச் சஞ்சரிக்கலாம்'' என்றனள்.

மயக்கங்கொண்ட சூர்ப்பணகை இவ்வாறு சொல்லப் பேசுவதில் வெகுசமர்த்தரான இராமர்சிரித்து அவ்வரக்கி யைப்பார்த்துச் சொல்லத்தொடங்கினர்.

பதினெட்டாஞ்சருக்கம்.

சூர்ப்பணகை

மூக்குங் காதும் அறுபட்டது.

இவ்வண்ணம் காமவலையில் கட்டுண்டு பேசின சூர்ப் பணகையைப்பார்த்து இராமர் சிறிதுமுறு வலித்துப் பரிகாசமாகக் கூறலுற்றார்:—

இராமர் கூறிய மறுமொழி.

"மெல்லியலே, நான் கல்யாணமானவன். இவள் என் மனைவி. உன்னைப்போன்ற மங்கையர்கள் மாற்றவளைக்கண்டால் சகியார்கள். என்தம்பி லக்ஷ்மணன் மிகநல்லவன்; அழகுள்ளவன்; நல்லபாக்கியவான். அவனு க்கு மனைவியில்லை. அவன் அதிபலசாலி. அவன் மனைவியாற் பெறும் இன்பத்தை அறியான்; சிறுபிராயத்தான். உன்னு டைய அழகான உருவத்துக்கு அவன்தான் சரியான புரு ஷன். ஆகையால் மேருமலையைச் சூரியனுடைய கிரணம் போய் அடைவதுபோல நீ அவனைப் புருஷனாக அடைந் தால் சக்களத்தி பயமில்லாமல் இருக்கலாம்.'' இவ்வாறு

இராமர் சொல்லவே, காமத்தால் மோகித்திருந்த சூர்ப்பணகை உடனே அவரை விட்டுவிட்டு விரைவாக லக்ஷ்மணரிடமோடி அவரைப்பார்த்து "வெகுவழகான உருவம் படைத்த தங்களுக்குத் தகுந்த மனைவி நானொருத்தியே. தாங்களும் என்னுடன் சுகமாகத் தண்டகையின் இடமெங்கும் சஞ்சரிக்கலாம்" என்று சொன்னாள். இவ்விதமாகத் தம்மைப் பார்த்துச் சூர்ப்பணகை சொல்ல, பேசுவதில் சமர்த்தராகிய லக்ஷ்மணர் புன்னகைசெய்து அவளை நோக்கி "தாமரைபோன்ற அழகான நிறமுள்ள மாதே, நான் சுவதந்தரம் உள்ளவனல்லன். என் தமையனாருடைய தாஸன். தாஸபூதனான எனகக்கு நீ மனைவியாகுவது நன்றாகவிருக்கவில்லை. மிக்க சிறுபெண்ணாகிய நீ உன் மனோரதங்களை நிறைவேற்றிககொள்ள விரும்பின் வெகு பாக்கியசாலியான என் தமையனாருடைய மனைவி யாகிவிடு. அதி குரூபியும், கெட்டவளும், அழகற்றவளும், சரிந்தவயிறுள்ளவளும், கிழவியுமாயிருக்கிற சீதையை அவர் கைவிட்டு உன்னையே மணம்புரிவார். நிகரற்ற நேரிழையே, வருணிக்க முடியாத அழகமைந்தவளே, கொஞ்சமாவது பகுத்தறிவுள்ள ஒருவன், இவ்வித சிலாக்கியமான வடிவத்தைத் தனக்கு வேண்டாமென்று தள்ளிவிட்டு மனிதசாதியில் பிறந்த மாதினிடத்திலும் அன்புவைப்பானா" என்று கூறினார். இதுபரிகாசம் என்றறியும் புத்தியில்லாத, சரிந்த வயிறுடைய அக்கொடிய ராக்ஷசி அவர்சொன்னசொல்லை உண்மையென்றெண்ணிக் காதலால் மயங்கிச் சீதாதேவியுடன் பர்ணசாலையில் உட்கார்ந்திருந்த, தெவ்வரை அடக்கும்திறலுடைய, நிகரற்ற பராக்கிரமமுள்ள இராமரை நாடிச்சென்று அவரைநோக்கி "இந்த அழகற்ற, கெட்டநடக்கையுள்ள, சரிந்தவயிறுள்ள கிழவியை மனைவியாக அடைந்திருக்கிறபடியால் தாங்கள் என்னிடம் அன்பற்

சூர்ப்பணகை லக்ஷ்மணரை வரித்தது.

லக்ஷ்மணர் கூறிய மறுமொழி.

திருக்கிறீர்கள். மனுஷியாகிய இப்பேதையை நானிதோ தாங்கள் பார்த்துக்கொண்டிருக்கப் புசித்துவிடுகிறேன். அதன்பிறகு சக்களத்தி பயமின்றி நான் தங்களுடன் கூடச் சுகமாக வசிக்கிறேன்" என்று சொல்லி, எரிகிற அக்கினி போன்ற கண்ணையுடைய அவ்வரக்கி வெகு கோபத்துடன் உரோகிணி நக்ஷத்திரத்தை ஒரு தூமகேது சீறிச் செல்லுவதுபோல மான்போன்ற பார்வையுடைய சீதையை நோக்கி ஓடினாள். காலபாசத்துக்கொப்பாக அவ்வாறு ஓடிவருவம் அரக்கியை வலிமிகுந்த இராமர் தடுத்து வெகு கோபங்கொண்டு லக்ஷ்மணரைப்பார்த்து "லக்ஷ்மணா, கொடிய குணமுள்ள துஷ்டர்களுடன் விளையாடல் ஒருபொழுதும் கூடாது. சீதையினுடைய உயிருக்கு நாசம்வரப் பார்த்தது. குரூபியும், கொடியவளும், மதம் பிடித்தவளும், வயிறு பெருத்தவளுமான இந்த ராக்ஷசியை உருவங் குலைத்துவிடு" என்றார். இராமர் அவ்வாறு சொல்ல, லக்ஷ்மணர் சூர்ப்பணகையைப் பார்த்து வெகு கோபங்கொண்டு தமது கத்தியை எடுத்து அவளுடைய காதுகளையும் மூக்கையும் அறுத்துவிட்டார். தனது மூக்கும் காதும் வெட்டுண்டவுடன் சூர்ப்பணகை வெகு பயங்கரமாகக் கதறிக்கொண்டு தான் வந்தவழியாகவே காட்டுக்குள் ஓடினாள். மகா கோரமுள்ள அவ்வரக்கி அங்கபங்கமடைந்தவுடன் தேகமெல்லாம் இரத்தம் வழிந்தோட மழைகாலத்தில் மேகமொலிப்பதுபோலச் சத்தமிட்டுக்கொண்டு தனது கைகளை மேலே உயர்த்திக்கொண்டு காட்டில் புகுந்தாள். அதன்பிறகு அவள் கரன் என்ற தனது தமையனிருந்த ஜனஸ்தானத்துக்குச்சென்று ராக்ஷசர்கள் சூழச் சபையில் பயங்கரமாக விளங்கிக்கொண்டிருந்தஅவன் முன்பாக ஆகாசத்திலிருந்து இடிவிழுவதுபோலப் போய் விழுந்தாள்.

சூர்ப்பணகை சீதையைக் கொல்ல ஓடியது.

சூர்ப்பணகை மூக்கும் காதும் வெட்டுண்டது.

அதன்மேல் அவள் பயத்தாலும் மோகத்தாலும் மூர்ச்சை யடைந்து அதுதெளிந்தவுடன், அவனுக்கு, சீதா லக்ஷ்மணர்களோடு இராமர் பஞ்சவடியில் வந்திருப்பதையும் தான் அங்கபங்கமடைந்த கதையையும் தன்மேல் இரத்த மோடும் வகையையும் மற்றெல்லாச் சமாசாரங்களையும் தெரிவித்தாள்.

பத்தொன்பதாஞ்சருக்கம்.

இராமரைக்கொல்லக் கரன் பதினன்கு ராக்ஷசத் தலைவர்களை அனுப்பியது.

கரன் மூக்கும் காதும் வெட்டினது யாரென்று வினவியது.

உருவங்குலைந்து, இரத்தம் பெருகிக்கொண்டு, தன் முன் கதறிக்கொண்டு வந்துவிழுந்த தனது தங்கையாகிய சூர்ப்பணகையைக் கரன்பார்த்து மனங் கொதித்து 'எழுந்திரு; உனது பயத்தையும் கலக்கத்தையும் விட்டு விடு; இவ்விதமாக நீயாரால் உருக்குலைக்கப்பட்டாய் என்பதைத் தெளிவாகச் சொல்லு. ஒருவருக்கும் எவ்வித உபத்திரவமுஞ் செய்யாமலிருந்த விஷமுடைய கிருஷ்ணசர்ப்பத்தின் வாயில் விளையாட்டாக விரலிட்டவன் எவன்? எவன் இவ்விதமாகத் தனது கழுத்தில் காலபாசத்தை வேண்டுமென்று மாட்டிக் கொண்டு அடுத்த நிமிஷத்தில் தனக்கு வரப்போகிற தீமையை அறியாமலிருக்கிறான்? எவன் இன்று உன்னை இவ்வாறுசெய்து உத்தமமான விஷத்தைப் பானம்பண்ணினன்? பலமும் பராக்கிரமமும்பொருந்தி, வேண்டிய உருக்கொண்டு, இஷ்டயான இடத்தில் சஞ்சரித்துக்கொண்டு, யமனுக்கொப்பாக விருக்கும் நீ இவ்வித அவஸ்தையை யாரால் அடைந்தாய்? தேவர்கள், கந்தர்வர்கள், மகாத்துமாக்களான இருஷிகள் ஆகிய இவர்களுள் மகாவீரியம் பொருந்திய யாவன் உன்னை இவ்வாறு அங்கபங்கம் பண்ணினன்? இவ்வுலகத்தில் எனக்குக் கெடுதல் செய்யத்

தக்கவன் ஒருவனுமில்லை. பாகாசுரனை வதைசெய்து ஆயிரங் கண்கள் படைத்திருக்கும் இந்திரனாலும் இருக்கட்டும். அவனை நீருடன் கலந்திருக்கும் பாலைப் பிரித்து அன்னப்பறவை பானம் பண்ணுவது போல, யமனுக்கொப்பான என் பாணங்களால் பிடித்திழுத்து வதைக்கிறேன். என் பாணத்தால மார்பு பிளக்கப்பட்டு யுத்தத்தில் என்னால் கொலலப்பட்ட அவன் தேகத்திலிருந்து குமிழியிட்டோடும் இரத்தத்தைப் பூமியானது இன்று குடிக்கட்டும். அவன் இன்று என்னால் யுத்தத்தில் அடிபட்டுமாள அவன் சவத்தைப் பறவைகள் கூட்டங்கூட்டமாக உட்கார்ந்துகொண்டு சந்தோஷமாகக்கிழித்துப் புசிக்கட்டும். என்னால் இந்தக்கேடு செய்யப்படுபவனை யுத்தத்தில் தேவர்கள், கந்தர்வர்கள், பிசாசர்கள், ராக்ஷசர்கள் ஒருவராலும் காப்பாற்ற முடியாது. ஆகையால், மெல்லவாக நீ தெளிவடைந்தவுடன் எந்தத் துஷ்டன் இவ்வாறு உன்னைக் காட்டில் அவமானப்படுத்தினான் என்பதைத் தெரிவி" என்றான்.

இவ்விதமாக வெகு கோபத்தோடு தனது தமையன் மொழிந்ததைச் சூர்ப்பணகை கேட்டு, கண்ணுங்கண்ணீருமாக அவனைப்பார்த்துச் சொன்னாள் :—"யௌவனமான மிக அழகிய உருவமுள்ளவர்களாய், மகா பலசாலிகளாய், தாமரைபோல விசாலமான கண்களுடையவர்களாய், மரவுரியும் மான்தோலும் உடுத்து, பழங்களையுங் கிழங்குகளையும் புசித்து, வெகுபரிசுத்தர்களாய், ஐம்புலன்களையுமடக்கித் தருமத்தை நடத்தும் தபசிகளாய், சந்தர்வ மன்னவருக்கொப்பானவர்களாய், ராஜலக்ஷணங்கள் அமைந்த தசரதருடைய குமாரர்களான இராமலக்ஷ்மணர்களென்ற இரண்டு சகோதரர்கள் இப்பொழுது இக்காட்டில் வந்திருக்கிறார்கள். அவர்கள் தேவர்களோ அல்லது மனிதர்களோ என்பதையான் அறியேன். எல்லாவிதலக்ஷணமுமமைந்து

சூர்ப்பணகை ராமலக்ஷ்மணர்கள் என்றது.

எல்லாவித நகைகளும் பூண்டிருக்கும் ஒரு அழகான சிறுபெண் அவர்களுடனிருக்கிறாள். அந்தப் பெண்ணின் நிமித்தம் அவர்களால் நான் அநாதையாய் நெறிநீங்கி அலையும் ஒருபெண்போல அவமானம் அடைந்தேன். தீயநெறியில் ஒழுகும அந்தப்பெண்ணையும் அவர்களையும் சண்டையில் கொன்று அவர்களுடைய இரத்தத்தை நான் நுரையுடன் குடிக்க விரும்புகிறேன். இதுதான் என் முதல் கோரிக்கை. அண்ணா, நீதான் இதை நிறைவேற்றிவைக்க வேண்டும்; அம்மூவர்களுடைய இரத்தத்தையும் சண்டையில் நான் குடிக்கவேண்டும்.'' இவ்விதமாக அவள்சொல்லக் கேட்ட கரன், வெகுகோபங்கொண்டு, யமனுக்கொப்பான மகாபலம் பொருந்திய பதினான்கு ராக்ஷஸர்களைப் பார்த்து "ஆயுதபாணிகளாய் மரவுரி மான்றோல் உடுத்து இரண்டு மனிதர்கள் ஒரு பெண்ணுடன் இந்தப் பயங்கரமான தண்டகாரணியத்துக்கு வந்திருக்கிறார்களாம். அவர்களையும் அக்கொடிய பெண்ணையும் நீங்கள் கொன்றுவிட்டு வரவேண்டும். அம்மூவர்களுடைய இரத்தத்தை என் தங்கை குடிக்கட்டும். ராக்ஷசர்களே, இதுதான் என் தங்கையின் விருப்பம். அவ்விருவர்களையும் உங்கள் பராக்கிரமத்தால் கொன்று இவ்விருப்பத்தைச் சீக்கிரமாக நிறைவேற்றுங்கள்'' என்று கட்டளையிட்டான். அவ்வாறு கட்டளை இடப்பட்ட பதினான்கு ராக்ஷசர்களும் காற்றினால் ஓட்டப்பட்ட மேகங்கள்போல இராமரிருந்த இடத்தை காடிச் சூர்ப்பணகையுடன் சென்றார்கள். எவ்வளவு கூரான பாணங்களை அவ்வரக்கர்கள் வைத்திருந்தபோதிலும் வெகு காந்தியாலும் பராக்கிரமத்தாலும் விளங்கும் இராமரை வெல்ல அவர்களால் முடியாது. நன்றாகக்கொழுந்துவிட்டெரியுங் காட்டுத்தீயை அணுக்க யானைகளால் முடியுமா?

கரன் ராமலக்ஷமணர்களைக் கொலலக் கட்டளையிடல்.

இருபதாஞ்சருக்கம்.

இராமர் தம்மைக்
கொல்லவந்த பதினன்கு ராக்ஷசத்தலைவர்களையும் வதைத்தல்.

ராக்ஷசத்தலைவர்கள் இராமரைக் கண்டது.

பிறகு அப்பயங்கரமான சூர்ப்பணகை அவ்வரக்கர்களோடு இராமருடைய ஆச்சிரமஞ்சேர்ந்து அவ்விடத்தில் சீதையுடன் உட்கார்ந்திருந்த அவ்விருசகோதரர்களையும் அவர்களுக்குக்காண்பித்தாள், அவர்கள் விதேகநகரத்து இராஜகுமாரியான சீதையோடும் தமது தம்பி லக்ஷ்மணரோடும் உட்கார்ந்திருந்த மகாபலம்பொருந்திய இராமரைக் கண்டார்கள். அவ்வாறு வந்த ராக்ஷசர்களையும் சூர்ப்பணகையையும் இராமர் கண்டு தமது பலத்தால் விளங்கிக்கொண்டிருக்கும் லக்ஷ்மணரைப் பார்த்து, "லக்ஷ்மணா, கொஞ்சநேரம் சீதையைக் காத்துக்கொண்டிரு. இவ்விடம் வந்திருக்கும் அரக்கர்களை நான் வதஞ்செய்கிறேன்" என்றார். எல்லாமறிந்த இராமர் சொன்னதைக் கேட்டு லக்ஷ்மணர் "அப்படியேயாகட்டும்" என்று சொல்லி அவ்வாறே செய்தார். உடனே தர்மாத்துமாவாகிய இராமர் தங்கக்கட்டமைந்த தமது பெரிய வில்லை நாணேற்றிக் கையிற் பிடித்துக்கொண்டு அங்கு வந்திருந்த அரக்கர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினர்:—"நாங்களிருவரும் தசரதமன்னவரின் குமாரர்கள். எங்கள்பெயர் இராம லக்ஷ்மணர்கள். எளிதில் கடக்கமுடியாத இத்தண்டகாரணியத்துக்குச் சீதையுடன் நாங்கள் வந்திருக்கிறோம். நாங்கள் பழங்களையும் கிழங்குகளையும் புசித்துப் புலன்களை அடக்கித் தவஞ்செய்துகொண்டு தருமநெறி தவறாது இந்தத் தண்டகாரணியத்தில் வசித்துக்கொண்டிருக்கிறோம். எங்களைநீங்கள் ஏன் இம்சிக்க வந்தீர்கள். இருஷிகள்

இராமர் ராக்ஷசர்களை ஓடிவிடும்படி சொல்லல்.

நடத்தும் பெரிய யாகங்களுக்கு எப்பொழுதும் இடையூறியற்றும் பாபிகளாகிய உங்களை வதைக்கவேண்டுமென்று, அவர்களுடைய வேண்டுகோளின்படி, நான் எனது பாணங்களையும் மற்ற ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு இங்கு வந்திருக்கிறேன். என்னுடன் போர்புரிய வேண்டுமென்ற எண்ணமிருந்தால் இவ்விடமே பின் வாங்காமல் நில்லுங்கள். அல்லது இவ்வுலகத்தில் உங்களுக்கு உயிருடனிருக்க வேண்டுமென்ற ஆசையிருந்தால் இவ்விடம் விட்டு, நிசாசரர்களே, ஓடிவிடுங்கள்." எப்பொழுதும் பிராமணர்களை வதைக்குங் குணமுடையவர்களான சூலந்தரித்த கையுடைய அப்பதினன்கு ராக்ஷசர்களும் இராமர்சொன்ன சொல்லைக் கேட்டு வெகு கோபங்கொண்டு அவரை நோக்கி "மிக்க பெருமைபொருந்திய எங்கள் அரசன் கரனுக்கு நீ கோபமுண்டாகும்படி நடந்துவிட்டபடியால் நீதான் இன்று யுத்தத்தில் எங்களால் வதைக்கப்பட்டு உன்னுடைய பிராணனை இழக்கப்போகிறாய். ஒருவனாகிய உனக்குப் பலராகிய எங்கள்முன் செருமுகத்தில் எதிர்த்து நிற்க என்ன பலமுண்டு? அப்படியிருக்க, எங்களுடன்போர் புரிய வந்துள்ள உன்னை நாங்கள் என்னசொல்வது? எங்கள் கையிலிருந்து விடப்படும் கதைகளாலும், சூலங்களாலும், கத்திகளாலும் உனது பிராணனையும் பலத்தையும் அவ்வாறே உனது கையிற்பிடித்திருக்கும் வில்லையும் நீ இழக்கப்போகிறாய்" என்று கூறி, வெகு கோபத்துடன் அப்பதினன்கு அரக்கர்களும் ஒருவராலும் எதிர்க்கமுடியாத இராமர்மேல் தாங்கள் கையில் பிடித்திருந்த சூலங்களை விசைகொண்டு எறிந்தார்கள். அவ்விதமாகத் தம்மீது விடப்பட்ட பதினன்கு சூலங்களையும் இராமர் பொன்னிழைத்த பாணங்களைச் செலுத்தித் துணித்தெறிந்தார். பிறகு வெகு கோபங்கொண்டு இராமர் சூரியனுக்கொப்பாகிய, கல்லையுந் துளைக்குங் கூர்மையுள்ள பதினன்கு பாணங்க

ராக்ஷசத்தலைவர்கள் யுத்தம்.

ளைக் கையிலெடுத்து, தமது வில்லே நேராக நிறுத்தி அதில் பூட்டி, அவ்வரக்கர்களைச் சரியாகக் குறிப்பிட்டு, இந்திரன் தனது வச்சிராயுதத்தை விடுவதுபோல விடுத்தனர். தங்க மிழைத்து மின்னிக்கொண்டிருந்த அப்பாணங்கள் வெகு வேகமாகச் சென்று அரக்கர்களுடைய மார்புகளைப் பிளந்து இரத்தத்தில் தோய்ந்து இடிமுழக்கம்போலக் கர்ச்சித்துக்கொண்டு பூமியில் விழுந்தன. அரக்கர்கள் தங்கள் மார்புகள் பிளவுண்டு தேகம் முழுதும் இரத்தமோடப் பாணத்தால் உடம்புகள் துளைக்கப்பட்டுப் பிராணனை இழந்து வேர்வெட்டுண்ட விருக்ஷங்கள் போலப் பூமியிற் சாய்ந்தார்கள். அவர்கள் அவ்வாறு பூமியில் விழுந்ததைக் கண்ட சூர்ப்பணகை வெகு கோபமடைந்து நடுநடுங்கி அவ்விடத்தில் மிகப் பயங்கரமாகக் கர்ச்சித்தாள். பிறகு அவ்வண்ணம் கர்ச்சித்துக்கொண்டே அவள் வெகு வேகமாகச் சிறிது உலர்ந்த இரத்தத்துடன் கரன்முன் சென்று பட்டை சீவப்பட்டுப் பால் வடிக்கும் சபலகீ விருக்ஷம்போலத் தரையில் விழுந்தாள். தனது தமையன் முன்பாக அவள் பெருஞ்சத்தமாகக் கதறினாள்; பின்பு முகம்வாடி அழுது கண்ணீர் விட்டாள். ராக்ஷசர்கள் போரில் மடிந்ததைக் கண்டு அவ்விடம் விட்டோடிப் போன சூர்ப்பணகை தன் தமையனான கரனிடம் அவர்கள் மாண்ட விஷயத்தை ஒன்றும் விடாமல் சொல்லினள்.

இருபத்தொன்றாஞ்சருக்கம்.

பதினான்கு ராக்ஷசத்தலைவர்களும் மாண்ட செய்தியைக் கரன் தனது தங்கையிடமிருந்து தெரிந்துகொள்ளல.

அவ்வாறு மறுபடியும் தன் முன்விழுந்து அழுகின்ற, அழிவுக்குக் காரணமாய் வந்தவளாகிய சூர்ப்பணகையைக் கரன் பார்த்து, அவளிருந்த நிலைமையைக் கண்டு கோபங் கொண்டவனாகி "எப்பொழுதும் இரத்தங்குடிப்

பதில் அதிக ஆசையுள்ள சூரர்களான ராக்ஷசர்களை இப்பொழுதுதான் உனக்காக நான் அனுப்பினேனே, அப்படியிருக்க நீ மறுபடியும் அழவேண்டிய காரணமென்ன? அவர்கள் என்னிடத்து அதிக அன்பும் விசுவாசமும் உள்ளவர்கள்; எப்பொழுதும் என் நன்மையையே நாடி நடப்பவர்கள்; எதிர்த்தவர்களால் கொல்லமுடியாதவர்கள்; என் கட்டளைக்கு அடங்காதவர்களுமல்லர். அப்படியிருக்க ஏன் நீ இப்பொழுது அப்பா, ஐயா, என்று கதறிக்கொண்டு பூமியில் விழுந்து பாம்பு புரளுவதுபோலப் புரளுகிறாய்? அதன் காரணமெனக்குப் புலப்படவில்லை; அதை நான் கேட்கவிரும்புகிறேன். உனக்கு நாதனாகிய நான் இருக்கையிலேயே நீ ஏன் அநாதைபோல் புலம்புகிறாய். எழுந்திரு; எழுந்திரு. உனது பயத்தை விட்டுவிடு" என்று கூறினான். கரனால் சாந்தம்பண்ணப்பட்ட அந்த அடங்காத அரக்கி தனது கண்களைத் துடைத்துக்கொண்டு தமையனைப் பார்த்து, "காதுகளும் மூக்கும் வெட்டுண்டு இரத்தஞ் சொரிய நான் தங்களிடம் வந்தேன். தாங்கள் என்னை அன்பாகச் சமாதானம் பண்ணிவைத்தீர்கள். பதினன்கு ராக்ஷச வீரர்களையும் என் பொருட்டு அனுப்பினீர்கள். என் மனதைக் களிப்பிக்க அவர்களை இராமனையும் லக்ஷ்மணனையும் வதைக்கக் கட்டளையிட்டீர்கள். கையில் தரித்த சூலங்களையும் கத்திகளையும் உடைய கோபிகளான அவ்வரக்கர்கள் மார்பைப் பிளந்து சென்ற பாணங்களால் யுத்தத்தில் கொல்லப்பட்டார்கள். மகாபலம்பொருந்திய அவர்கள் ஒரு நொடியில் மாண்டு பூமியில் விழுந்ததையும், இராமனது ஆச்சரியமான செய்கையையும் கண்டு எனக்குப் பெரும்பய முண்டாயிருக்கிறது. என் ராக்ஷச சிங்கமே, நான் பயந்து நடுங்கிக் குலைகுலைந்திருக்கிறேன். நான்கு பக்கங்களிலும் பயம்வரக்

கரன் சூர்ப்பணகையைத் துக்கத்திற்குக் காரணம் வினவல்.

சூர்ப்பணகை கரனை இகழ்தல்.

கண்டு நான் உன்னைச் சரணமடைந்தேன். சோகமாகிய பெருமுதலைகளையும் பயமாகிய அலைகளையுமுடைய இந்தத் துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கும் என்னை நீ காப்பாற்ற மாட்டாயா? அங்கே சென்ற மாமிச பக்ஷணிகளாகிய அரக்கர்கள் எல்லாரும் இராமனுடைய கூர்மையான அம்புகளால் மடிந்துவிட்டார்கள். என்மீதும் அவ்வரக்கர்கள் மேலும் உனக்குக் கருணை இருப்பதும் இராமர் முன்னின்று போர்புரிய உனக்குச் சக்தி இருப்பதும் உண்மையானுல், இப்பொழுது தண்டகாரணியத்தில் குடிவந்த இவ்வரக்கர்குல கோடரியை நீ நாசம் பண்ண வேண்டும். எனக்குச் சத்துருவாகிய இராமனை நீ இன்று கொல்லாவிடில், நான் வெட்கம் மானம் என்பவைகளை விட்டு நின் கண்முன்பாக என் உயிரை விட்டுவிடுவேன். இராமன் முன்பாகச் செருமுகத்தில் சைநியங்களுடன் எதிர்த்து நின்று பெரும்போர் செய்ய உன்னுல் முடியாதென்று என் புத்திக்குத் தோன்றுகிறது. நீ நின்னை நின் மனத்தில் வெகு சூரனுக எண்ணிக்கொண்டிருக்கிருய்; ஆனுல் உண்மையாக நீ சூரனல்லன். நின்னிடத்தில் வீரமுண்டென்பது பொய். மானுடர்களாகிய இராமலக்ஷ்மணர்களை நின்னுல் கொல்ல இயலாதாயின், அரக்கர்குலநாசகா, வலியில்லாத நீ இவ்விடத்தில் எங்ஙனம் வசித்தல்கூடும்? நீ நின் உறவினர்களுடன் தாமசமின்றி இந்த ஜனஸ்தானத்தை விட்டோடிப்போ. இராமனுடைய பராக்கிரமத்தால் வெகு சீக்கிரத்தில் தோல்வியடைந்து மாண்டு விடப்போகிருய். ஏனெனில், தசரதகுமாரனுன இராமன் வெகு பராக்கிரமமுள்ளவன். என்னை உருக்குலைத்த அவன் தம்பி லக்ஷ்மணனும் அதிக வீரமுள்ளவன்" என்றுள். பெரிய வயிற்றையுடைய அந்த அரக்கி இவ்வாறு நெடுநேரம் புலம்பித் தனது கைகளால் மார்பிலடித்துக்கொண்டு வெகு துக்கத்துடன் கதறினுள்.

இருபத்திரண்டாஞ்சருக்கம்.

கரன் பதினாலாயிரம் ராக்ஷசர்களுடன் யுத்தத்திற்குச் சென்றது.

கரன் சூர்ப்பணகையை சமாதானம் செய்தல்.

அரக்கர்கள் மத்தியிலிருந்த மகாசூரனாகிய கரன், சூர்ப்பணகை இவ்வாறு இடித்திடித்துச் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டுச் சகிக்கமுடியாதவனாகி, அவளைப்பார்த்து "அம்மா, நீ சொன்ன அவமானச் சொற்களால் எனக் குண்டாயிருக்குங் கோபத்துக்கு அளவேயில்லை. பொங்கி வரும் சமுத்திரத்தைத் தாங்கமுடியாத கரைபோல் அதனை என்னால் சகிக்கமுடியவில்லை. என் வீரத்துக்கு மானுடனாகிய இராமனை நானொரு பொருளாக எண்ணவேயில்லை. தான் செய்த குற்றத்திற்காக அவன் இன்று என்னால் வதைக்கப்பட்டுத் தன் பிராணனை இழக்கப்போகிறான். ஆகையால், நீ கண்ணீரைச் சொரிவதை அடக்கு; உன் பயத்தை விட்டுவிடு. நானின்று இராமனை அவன் தம்பியுடன் யமன்வீட்டுக்கு அனுப்பி விடுகிறேன். போரில் கோடரியால் பிளக்கப்பட்டு உயிரற்று விழுந்த இராமனுடைய இரத்தத்தைச் சுடச்சுட நீ இன்று குடிக்கலாம்" என்றனன். இவ்வாறு அவன் சொன்னதைக்கேட்ட சூர்ப்பணகை வெகு சந்தோஷமடைந்து ராக்ஷசர்களுக்குள் உத்தமனான தனது தமையனைத் தனது ஸ்திரமற்ற புத்தியினால் மறுபடி புகழ்ந்து கூறினாள். இவ்விதமாக முதலில் அவளால் தூஷிக்கப்பட்டுப் பிறகு புகழப்பட்ட கரன், தனது சேனாபதியான தூஷணனைப்பார்த்து, "அன்பனே, எனது சொற்றவறாமல் நடப்பவர்களும், அஞ்சத்தக்க வேகத்தை உடையவர்களும், போர்முகத்தில் பின் வாங்காமல் நிற்கும் திறலுள்ளவர்களும், நீலமேகம் போலக்

கரன் யுத்தத்திற்குப் புறப்படல்.

கரிய தேகத்தை உடையவர்களும், கொடுமைசெய்தலைத் தங்களுக்கு விளையாட்டாகக் கொண்டவர்களும், புலிகள் போலச் செருக்குள்ளவர்களும், பெருவாயும் பெரும்பலமும் படைத்தவர்களும், பராக்கிரமமுள்ளவர்களுமான பதினாலாயிரம் ராக்ஷசர்களைத் தண்டுசேர். என் அன்பனே, எனது இரதத்தையும் எனது வில்லையும் பாணங்களையும் வாள்களையும் கூரிய பல வேல்களையும் கொண்டுவா. போரில் வல்லோனே, செருக்குற்ற இந்த இராமனை வதைக்கப் பெருமிதமுள்ள ராக்ஷசர்களுக்கு முதலில் நானே போகிறேன்" என்றனன். இவ்வாறு கரன் சொல்லத் தூஷணன் அநேக வித வர்ணமுடைய குதிரைகளைப் பூட்டிச் சூரியனுக்கொப்பாகிய காந்தியையுடைய இரதத்தைக் கொண்டுவந்தனன். மேருமலையின் சிகரம்போல் விளங்குவதும், மாற்றுயர்ந்த தங்கத்தால் இழைக்கப்பட்டதும், தங்கச் சக்கரங்களை யுடையதும், சிறந்ததும், வைடூரிய மணிகளிழைத்த நுகத்தடியையுடையதும், தங்கத்தால் இயற்றப்பட்ட மீன்கள், புஷ்பங்கள், மரங்கள், மலைகள், சந்திரன், சூரியன், மங்கள வஸ்துக்கள், பறவைக்கூட்டங்கள், நக்ஷத்திரங்கள் முதலிய சித்திர வேலைகள் செய்யப்பட்டதும், கொடிகளையும் வாள்களையுமுடையதும், மணிகள் கட்டப்பட்டதும், மிக்க அழகான குதிரைகள் பூட்டப்பட்டதுமான அந்த இரதத்தின்மேல் கரன் வெகுகோபத்தோடு ஏறினான். தேரிலேறி இரதங்களும் ஆயுதங்களும் கொடிகளும் நெருங்கிய பெரிய சேனையிலுள்ள ராக்ஷசக் கூட்டங்களைப் பார்த்துக் கரனும் தூஷணனும் "நடவுங்கள்" என்று சொன்னார்கள். உடனே பெரிய அட்டகாசம்பண்ணிக்கொண்டு வெகு வேகமாகக் கைகளில் கதைகள், பட்டிசங்கள், சூலங்கள், கூரிய கோடரிகள், வாள்கள், சக்கரங்கள், மிகவழகாகப் பிரகாசிக்கும் வல்லயங்கள், ஈட்டிகள், குண்டாந்தடிகள், பெரியவில்லு

கரனுடைய ரதம்.

கள், முசலங்கள், அரிவாட்கள், பார்ப்பதற்குப் பயங்கர மான வச்சிராயுதங்கள்முதலியவைகளை எடுத்துக்கொண்டு கொடிய பதினாலாயிரம் ராக்ஷசர்கள் கரனுடைய எண்ணப் படி நடப்பவர்களாய் ஜனஸ்தானத்தை விட்டுக் கிளம்பி னார்கள். பயங்கரமான பராக்கிரமம்பொருந்திய ராக்ஷசர் கள் அவ்வளவு வேகமாக ஓடுவதைக்கண்டு கரனுடைய இர தம் சற்று விலகி நின்று, சிறிதுநேரம் பொறுத்துச் சென் றது. அதன்பிறகு கரனுடைய அநுமதிபெற்று, பொன் னினால் அலங்கரிக்கப்பட்டு விளங்கும் வலிமை மிக்க குதிரைகளைச் சாரதி வேகமாக ஓட்டலானான். அவ்வா றோட்டப்பட்ட சத்துருக்களை வதைக்கும் பராக்கிரம முள்ள கரனுடைய இரதம் சத்தத்தால் எண்டிசைகளை யும் நிரப்பிற்று. பெருஞ் சப்தத்தையுடைய கரனும் மிகச் சினந்து யமன்போலத் தனது சத்துருவைக் கொல் வதற்கு விரைந்து சீறிக்கொண்டு கன்மழைபொழியும் பெரிய மேகம்போல முழங்கிச் சாரதியை இரதத்தை ஓட் டும்படி ஏவினான்.

இருபத்துமூன்றுஞ்சருக்கம்.

கரன் படையெழுந்தபொழுது உண்டான அபசகுனங்கள்.

அவ்வாறு கரனுடைய கொடிய அமங்களமான படை செல்லுகையில், ஆகாசத்தில் ஒரு கார்மேகந் தோன் றிப் பயங்கரமாகக் கர்ச்சித்துக் குருதிமழை பொழிந் தது. அவன் இரதத்தில் கட்டியிருந்த மகாவேகமுள்ள குதிரைகள் புஷ்பங்கள் சொரிந்து சம தரையாகவிருந்த ராஜமார்க்கத்தில் திடீ ரென்று விழுந்தன. சூரியனுக்கயலில்சிவ ந்த ஓரத்தையுடைய கொள்ளிக்கட்டை போன்ற ஒரு கறுப்புவட்டந் தோன்றிற்று. பருத்த உட

கரனுக்குண்டான அபசகுனம்.

லும் பயங்கரமான தோற்றமுமுடைய பருந்தொன்று வந்து அவன் கொடியையணுகி உயர்ந்த தங்கக்கொடிக் கம்பத்தில் உட்கார்ந்தது. வெடித்த குரலையுடைய மாமி சத்தைப்புசிக்கும் மிருகங்களும் பறவைகளும் ஜனஸ்தானத்துக்கருகில் அபசுரமாகக் கத்தத் தலைப்பட்டன. சூரியன் உதிக்கின்ற கிழக்குத் திக்கில் பெருங்குரலையுடைய பயங்கரமான நரிகள் அரக்கர்களுக்கு அபசகுனமாக ஊளையிட்டன. ஜலத்தையும் இரத்தத்தையும் தரித்துக்கொண்டு பயங்கரமான கார்மேகங்கள் இந்திரன் வச்சிராயுதத்தால் செதுக்கப்பட்ட மலைகளைப்போல் ஆகாசத்தை மூட, பார்ப்பவர்கள மயிர்க்கூச்செறியும்படியாக ஒரு பெரிய இருள் தோன்றித்திசைகளையெல்லாம் மறைத்தது. அகாலத்தில் இரத்தத்தால் நனைந்த துணிபோலச் செக்கர் மேகந் தோன்றிற்று. மிருகங்களும் பறவைகளும் கரனுக்கெதிரில் நின்று பயங்கரமாகச் சத்தித்தன. பருந்தும், கோமாயுவும், கழுகும், பயம் வந்துவிட்டதென்பதைத் தெரிவித்துக் கத்தத் தலைப்பட்டன.

எப்பொழுதும் யுத்தத்துக்கு அபசகுனமான நரிகள் பயங்கரமான தோற்றத்துடன் நெருப்புப் பொறியைக் கக்குகின்ற தங்கள் வாயைப் பிளந்துகொண்டு படைக்கெதிர்முகமாக நின்று ஊளையிட்டன. சூரியனுக்குச் சமீபத்தில் தலையற்ற முண்டமொன்று கதைபோல் ஆகாசத்தில் காணப்பட்டது. அன்று பூரணை இல்லாதிருப்பினும் சூரியனை இராகு பற்றிற்று. கொடிய சுழல்காற்று வேகமாக வீசிற்று; சூரியனும் ஒளி இழந்து தோன்றினன். இராக்கால மல்லவாயினும் ஆகாயத்திலிருந்து மின்மினிப் பூச்சிபோல நக்ஷத்திரங்கள் உதிர்ந்தன. குளங்களில் மீன்களும் பறவைகளும் செயலற்றிருந்தன; தாமரைப் புஷ்பங்கள் வாடிப்போயின. அப்போது விருக்ஷங்கள் புஷ்பங்களையும் பழங்களையும் இழந்தன. காற்றில்லாமலே மேகம்போலக் கறுப்பாகப் பூதூளி கிளம்பிற்று. கிளிகள் வீசி கூசி யென்று சுரந்தப்பிக் கத்தின. இந்

முழக்கங்களுடன் பயங்கரமான எரிநக்ஷத்திரங்கள் வீழ்ந்தன. மலைகளுடனும் காடுகளுடனும் பூமி கிடுகிடு என்று நடுங்கிற்று. இரதத்திலிருந்து கர்ச்சித்துக்கொண்டிருக்கும் பொழுதே, கரனுக்கு இடதுதோள் துடித்தது; வாய் குழறிற்று; கண்களிலிருந்து நீரோடிற்று; தலைவலி உண்டாயிற்று. இவ்வாறாயும் புத்தியின்மையால் கரன் திரும்பவில்லை. பயங்கரமான இந்த அபசகுனங்களையெல்லாம் பார்த்துச் சிரித்து, தன் சேனையிலிருந்த ராக்ஷசர்களை நோக்கிப் "பலமுள்ளவன் எவ்வாறு பலமற்றவர்களை ஒரு பொருளாக எண்ணமாட்டானோ அதுபோல் இப்பொழுது பயங்கரமாக உண்டாகும் இப்பெரிய அபசகுனங்களை நான் ஒருபொருளாக எண்ணவேயில்லை. கூர்மையான எனது பாணங்களால் நக்ஷத்திரங்களைக் கூட ஆகாசத்திலிருந்து கீழே விழச்செய்வேன். இஷ்டப்பட்டால் நான் யமனையும் சாம்படி செய்வேன். செருக்குற்றுத் துள்ளிக்கொண்டிருக்கும் இராமனையும் அவன் தம்பியையும் எனது கூரியபாணங்களால் கொல்லாமல் நான் திரும்பவேமாட்டேன். இராமனும் லக்ஷ்மணனும் மதிமயங்குதற்குக் காரணமான என் தங்கை அவர்களுடைய இரத்தத்தைக் குடித்துத் தனது மனோரதத்தை நிறைவேற்றிக்கொள்ளட்டும். இதுவரையில் நான் சண்டையில் ஒருபொழுதும் தோல்வி அடைந்ததே யில்லை. இது உங்களுக்கு நேரில் தெரிந்த சங்கதிதான். நான் பொய்சொல்லுகிறவனல்லன். கையில் வச்சிராயுதம் தரித்து மதம் பிடித்த ஐராவதத்திலேறிச் செல்லுந் தேவேந்திரனைக் கூட நான் செருவில் வதைக்கவல்லவனாயிற்றே! அப்படியிருக்க, இந்த இரண்டு மானிடர்கள் எனக்கொரு லக்ஷ்யமா?" என்றான். காலபாசத்தைக் கழுத்தில் மாட்டிக்கொண்டிருந்த அவ்வரக்கர் பெரும்படை கரன் இவ்வாறு சொன்னதைக் கேட்டு அடங்காத ஆனந்தமடைந்தது.

கரனுடைய வீரவார்த்தை.

இராமருக்கும் கரனுக்கும் நடக்கப்போகிற யுத்தத்தைப் பார்ப்பதற்காக மகாத்துமாக்களாகிய ரிஷிகள், தேவர்கள், கந்தர்வர்கள், சித்தர்கள், சாரணர்கள் எல்லாரும் அவ்விடம்வந்து சேர்ந்தார்கள். அவர்கள் தங்களுக்குள் "இவ்வுலகத்திலுள்ளபசுக்களுக்கும், பிராமணர்களுக்கும், இவ்வுலகத்து நன்மையை நாடியிருக்கிறவர்களுக்கும் நன்மையுண்டாகுக. இராமர் புலஸ்திய வம்சத்தில் பிறந்த அரக்கர்களெல்லாரையும் யுத்தத்தில் வெல்லுக.

தேவாதிகள் இராமனை வாழ்த்தல்.

சக்கராயுதத்தைக் கையிற்பற்றிய விஷ்ணுபகவான் எவ்வாறு அசுரர்களை வென்றாரோ அவ்வாறு இராமர் அரக்கர்களை வெல்லுக" என்று பேசிக்கொண்டார்கள். இவ்விதமாகவும் இன்னும் பலவிதமாகவும் சொல்லிக்கொண்டு யுத்தத்தைக் காண ஆவல்கொண்டு தேவதைகள் தங்கள் விமானங்களில் அங்குவந்து சேர்ந்து ஆயுள் மாய்தலினால் யுத்தத்திற்கு வந்துகொண்டிருந்த அரக்கர்களைக் கண்டார்கள். கரன் இரதத்திலேறித் தனது பயங்கரமான சேனையின் முன்வந்து நின்றான். அவன் அவ்வாறு நின்றதைக் கண்ட, சியேனகாமி, பிருதுக்கிரீவன், யக்ஞசத்துரு, விஹங்கமன், துர்ஜயன், கரவீராக்ஷன், பருஷன், காலகார்முகன், மேகமாலீ, மகாமாலீ, சர்ப்பாசியன், உதிராசனன் என்ற மகாவீரர்களான பன்னிரண்டு ராக்ஷசர்கள் கரனைச் சூழ்ந்துநின்றார்கள். தூஷணனுக்குப் பின்னர், மஹாகபாலன், ஸ்தூலாக்ஷன், பிரமாதி, திரிசிரன் என்ற நான்கு சேனைத்தலைவர்கள் சென்றார்கள். பயங்கரமான அந்த அரக்கர்பெருஞ்சேனை இராமலக்ஷ்மணர்களை நோக்கி, அங்காரகன் முதலிய கிரகங்கள் சந்திர சூரியர்களை எதிர்த்துச் செல்லுவதுபோல அதிவேகத்துடன் சென்றது.

இருபத்துநான்காஞ்சருக்கம்.

கரன்சேனை வரக்கண்ட இராமர் சீதையை அழைத்துக்கொண்டு குகைக்குள் சென்றிருக்கும்படி லக்ஷ்மணருக்குக் கட்டளையிட்டுவிட்டுத் தாம் யுத்தம்பண்ணச் சித்தமானது.

பராக்கிரமமுள்ள கொடிய கரன் இராமரது ஆச்சிரமத்துக்குச் சமீபத்தில் வரும்பொழுது அவர் தமது தம்பியுடன் அங்குண்டான அபசகுனங்களையெல்லாம் கண்டார். அப்பயங்கரமான நிமித்தங்களைக் கண்டு இராமர் தமது தம்பி லக்ஷ்மணரைப்பார்த்து "மகா பலம்பொருந்தியவனே, எல்லாப் பிராணிகளையும் ஒழித்துவிடக் கூடிய இப்பெரிய நிமித்தங்களைப் பார்! இவைகளெல்லாம் இப்பொழுது ராக்ஷசர்கள் நாசத்துக்காகவே தோன்றுகின்றன. வெகு பயங்கரமாகக் கர்ச்சித்துக்கொண்டு ஆகாசத்தில் தோன்றியிருக்கும் கழுதை வர்ணமான மேகங்கள் இரத்தமழை பொழிகின்றன; அவைகளைப்பார். யுத்தம்வந்துவிட்டதென்று களிக்கும் எனது பாணங்களைப்பார்; அவைகள் சந்தோஷத்தால் புகையைக்காலுகின்றன. பின்பக்கத்தில் தங்கத்தகடுதைக்கப்பட்ட எனது விற்களும் சந்தோஷத்தால் சுழலுகின்றன. காட்டில் உள்ள பறவைகள் கூவுகிறதைப் பார்த்தால் பிராணபயம் வந்திருக்கிறதென்று தோன்றுகிறது. பெரும்போர் இப்பொழுது விளையப்போகிறதென்பதற்குச் சந்தேகமேயில்லை. ஆனால், அடிக்கடி துடிக்கும் எனது வலக்கை நமக்கு வெற்றியுண்டாகுமென்பதையும் சத்துருக்களுக்குத் தோல்வியுண்டாகப் போகிறதென்பதையுங் காட்டுகிறது. வீரனே, உனது முகம்

இராமர் லக்ஷ்மணரைச் சீதையைக் காக்க ஏவல்.

வெகு தெளிவாயும் சந்தோஷகரமான ஒளியை உடைய தாயும் இருக்கிறது. தம்பி லக்ஷ்மணா, நம்மோடு சண்டை செய்ய எத்தனித்து வருகிறவர்களுடைய முகம் காந்தி யற்று அவர்களுக்கு ஆயுள் போய்விடும் என்பதைக் காட்டுகிறது. கொடிய செயல்களைப்புரியும் ராக்ஷசர்க ளுடைய கர்ச்சனையோடுகூட அவர்களது பேரியின் முழக்கமும் கேட்கின்றது. புத்திமானாயிருக்கப்பட்டவன் தனக்கு ஆபத்து வரப்போகிறதென்று எப்பொழுதுசந்தே கிக்கிறானோ அப்பொழுதே அதை வருமுன்னரே தடுக்க வேண்டிய பிரயத்தனங்கள் பண்ணவேண்டுமென்றோ? அப் பொழுதுதான் அவனுக்கு நன்மையுண்டு. ஆகையால் நீ உன்கையிற் பாணங்களையும் விற்களையும் சித்தமாக எடுத் துக்கொண்டு வைதேஹியோடு நான்குபக்கங்களிலும் மர மடர்ந்து ஒருவரும் எளிதில் அணுகக்கூடாத அம்மலையின் குகையில் போயிரு. என்பேச்சை நீ தட்டக்கூடாதென்று நானுன்னைக் கட்டளையிடுகிறேன். ஆகையால், நீ தாமதிக் காமல் உடனே செல். நீ சூரனென்பதிலும் வீரனென்பதி லும் இவ்வரக்கர்கள் எல்லாரையும் ஒருவனாகவே வதைக்க வல்லமையுள்ளவன் என்பதிலும் ஐயமேயில்லை. ஆனால் இவ்வரக்கர்களெல்லாரையும் நானே தனியாய் வதைக்க விரும்புகிறேன்" என்று சொன்னார். இவ்விதமாக இராமர் சொல்லியதைக் கேட்டு, லக்ஷ்மணர் வில்லையும் அம்பையும் கையிலெடுத்துக்கொண்டு சீதையுடன் ஒருவராலும் அணு கக்கூடாத குகையொன்றைச் சேர்ந்தார். லக்ஷ்மணர் அவ்வண்ணம் சீதையை அழைத்துக்கொண்டு குகை சேர, இராமர் "நாம் சொன்னபடி நமது தம்பிநடத்தி னன்" என்று சந்தோஷமடைந்து தமது கவசத்தை யெடுத்து அணிந்துகொண்டார். அக்கினிக்குச் சமமான கவசத்தைப் பூண்ட இராமர் இருட்டறையில் விளங் கும் புகையில்லாத நெருப்புப் போலப் பிரகாசித்தார். அவர் கையில் வில்லை ஏந்திப் பாணங்களைத் தெரிந்து

கொண்டு எத்திசையிலும் நாண் சத்தத்தைக் கேட்பித்து நின்றார்.

இவர்களுக்குள் நடக்கப்போகிற யுத்தத்தைப்பார்க்க மகாத்துமாக்களாகிய தேவர்கள், கந்தர்வர்கள், சித்தர்கள், சாரணர்கள், மகாத்துமாக்களாகிய முநிவர்கள், உலகத்திலுள்ள முக்கியமான பிரமரிஷிகள் எல்லாரும் அவ்விடம் வந்து சேர்ந்தார்கள். அப்புண்ணியாத்மாக்கள் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் "இவ்வுலகத்திலுள்ள பசுக்கள் அந்தணர்கள் இன்னும் இவ்வுலகத்தின் நன்மையைக் கருதியிருக்கப்பட்டவர்கள் எல்லாருக்கும் க்ஷேமமுண்டாகட்டும். சக்கரபாணியான விஷ்ணுபகவான் எவ்வாறு அசுரவீரர்களை வென்றாரோ அதுபோல இராமரும் புலஸ்திய வம்சத்தில் பிறந்த ராக்ஷசர்களையெல்லாம் வெல்லட்டும்" என்றார்கள். அன்றியும் அங்குவந்த ராஜரிஷிகளும் சித்தர்களும் அந்தணசிரேஷ்டர்களுடைய கூட்டங்களும் வெகு வியப்புடன் "கொடிய செயல்கள்புரியும் அரக்கர்கள் பதினாலாயிரம்பேர்; இராமர் ஒருவர்; இவர்களுக்குள் யுத்தம் எவ்வாறு நடக்கப்போகிறதென்பதைப் பார்க்க வேண்டும்" என்றார்கள். இவ்விதமாக ராஜரிஷிகளும், சித்தர்களும், பிராமணோத்தமர்களின் கூட்டங்களும், தேவதைகளும் வெகுவியப்புடன் தங்கள் தங்கள் விமானங்களில் காத்துக்கொண்டு நின்றார்கள். செருக்களத்தில் பெருமிதத்துடன் இராமர் நிற்பதைக்கண்ட பிராணிகளெல்லாம் பயத்தால் நடுநடுங்கின. மாசற்றசெயலுள்ள இராமருடைய ஒப்பற்ற உருவம் அப்போது பிநாகபாணியாகிய ருத்திரமூர்த்தியுடைய உருவம்போல மிகப் பயங்கரமாக விளங்கிற்று. அரக்கர்சேனை வெகு கம்பீரமாகக் கர்ச்சித்துக்கொண்டு, பயங்கரமான கவசங்களையணிந்து, ஆயுதங்களைக் கையிலேந்தி, கொடிகளை எடுத்துக்கொண்டு, அவ்வாச்சிரமத்தை நான்குபக்கங்களிலும் வந்து சூழ்ந்தது. அச்சமய

தேவாதிகள் இராமரை வாழ்த்தல்.

அரக்கர்கள் இராமரை வந்து சூழல்.

த்தில் அரக்கர்களில் சிலர் சிங்கம்போலக் கர்ச்சித்துக்கொண்டும், ஒருவரை நோக்கி ஒருவர் அட்டகாசம் பண்ணிக்கொண்டும், விற்களை வளைத்துக்கொண்டும், அடிக்கடி கொட்டாவிவிட்டுக்கொண்டும், வெகு பயங்கரமாகப் பல வித சத்தங்கள் பண்ணியும் பேரிகளை அடித்தும் அக்கான கத்தை ஒலிக்கச்செய்துகொண்டும் அங்குவந்து சேர்ந்தார் கள். காட்டில் உள்ள மனிதர்களும் மிருகங்களும் அச்சத் தத்தைக்கேட்டு நடுங்கிச் சத்தமற்ற இடத்தைநாடிப் பின் னே திரும்பிப்பாராமல் ஓடினார்கள். கடலுக் கொப்பான அப்பெருந்தானை அநேகவிதமான ஆயுதங்களைத் தரித்துக் கொண்டு வெகு கம்பீரமாகவும் அதி வேகமாகவும் இரா மரை எதிர்த்துவந்தது. யுத்தத்தில் வல்ல இராமர் நான்குபக்கங்களிலும் பார்த்து யுத்தமுயற்சியுடன் கர னுடைய சைனியம் தம்மை எதிர்த்து வருவதைக் கண் டார். உடனே அவர் வெகுகோபத்துடன் அதிசீக்கிரமாக அவ்வரக்கர்களை வதைக்கும்பொருட்டுத் தமது வில்லை வளைத்துப் பயங்கரமான பாணங்களைத் தூணீரத்தில் இருந்து எடுத்துவைத்துக்கொண்டு சித்தமாக நின்றார். அப்போது அவர் கற்பாந்தத்தில் உண்டாகும் அக் கினிபோல விளங்கினார். அவ்வித காந்தியால் விளங்கும் இராமரைக்கண்டு வனதேவதைகள் கூட நடுங்கினார்கள். கோபத்துடன் நின்ற இராமருடைய தோற்றம் தக்ஷனு டைய யாகத்தைச் சிதைக்கவந்த பினாகபாணியினுடைய தோற்றம்போலக்காணப்பட்டது. விற்களையும், ஆபரணங் களையும், கொடிகளையும், அக்கினிக்கொப்பானகாந்தியுடைய கவசங்களையும் தரித்து விளங்கும் பிசிதவூணர் சேனை சூரியோதய காலத்தில் ஆகாயத்தில் தோன்றும் நீல மேகங்களின் கூட்டம்போலக் காணப்பட்டது.

இருபத்தைந்தாஞ்சருக்கம்.

கரனுடைய சேனைக்கும் இராமருக்கும் நடந்த பலமான யுத்தம்.

கரன் இராமரை எதிர்த்தல்.

கரன், தன்முன்னேபோன சைநியத்துடன் இராமருடைய ஆச்சிரமத்துக்குச் சென்று, அவ்விடத்தில் பகைவரையடக்கும் பராக்கிரமமுள்ள இராமர் கையில் வில்லேந்தி வெகு கோபமாக நிற்பதைக்கண்டான். அவரைப் பார்த்தவுடன் கரன், வில்லையும், பாணங்களையும் கையில் எடுத்து உயர்த்திக்கொண்டு, அவருக்கு நேர்முகமாக இரதத்தை நடத்தும்படி "ஓட்டு, ஓட்டு" என்று சாரதியை நோக்கிப் பெருஞ் சத்தமாகக் கட்டளையிட்டான். கரனுடைய உத்தரவுப்படி, இராமர் வில்லைப்பிடித்துக்கொண்டு தனிமையாக நின்ற இடத்திற்குக் குதிரைகளைச் சாரதிநடத்தினன். அவ்வாறு கரன் இராமருக்கு எதிரில் சென்றதை அவன் மந்திரிமார்களான அரக்கர்கள் கண்டு அட்டகாசம் பண்ணிக்கொண்டு வந்து அவனைச்சூழ்ந்துநின்றார்கள். அரக்கர்கள் மத்தியில் கரன் இரதத்திலிருந்தது நக்ஷத்திரங்கள் மத்தியில் அங்காரகன் உதித்ததுபோல் விளங்கிற்று. பிறகு, கரன் பெரிய அட்டகாசம் செய்துகொண்டு, ஒப்பற்ற காந்தியால் விளங்கும இராமர்மேல் ஆயிரம் பாணங்களைத் தொடுத்தான். அவ்வண்ணமே, மற்ற அரக்கர்களும் வெகு கோபத்துடன் வில்லேந்திப் பயங்கரமாக நின்ற இராமர் மேல், அவரை வெல்ல முடியாதென்பதை அறியாமல், பலவித சஸ்திரங்களைப் பொழிந்தார்கள். அன்றியும் அவ்வரக்கர்கள் வெகு மானத்துடனுங் கோபத்துடனும் பெருங்கதைகளையும், கத்திகளையும், சூலங்களையும், பிராசங்களையும், அரிவாட்களையும், கோடரிகளையும் எடுத்துக்கொண்டு இராமரை எதிர்த்தார்கள். நீருண்ட மேகம்போன்ற கரிய தேகங்களையுடைய ராக்ஷசர்கள் சிலர் அட்டகாசம் பண்

அரக்கர்களுக்கும் இராமருக்கும் யுத்தம்.

ணிக்கொண்டு, தங்கள் பலத்தின் செருக்கால் இரதங்களிலும் குதிரைகளிலும் ஏறி, ஓடிவந்தெதிர்த்தார்கள். சிலர் இராமரை யுத்தத்தில் வெல்லவேண்டி மலைகளின் சிகரங்கள் போன்ற யானைகளைச் செலுத்திவந்தார்கள். அன்றியும், அவ்வரக்கர் கூட்டங்கள் அநேக மேகங்கள் கூடி இமயபர்வதத்தின்மேல் மழையைத் தாரைதாரையாகப் பொழிவதுபோல் இராமர்மேல் சரவருஷங்களைப் பொழிந்தார்கள். அவ்வாறு அரக்கர்களால் விடப்பட்ட மிக்க கூர்மையான ஆயுதங்களையெல்லாம் ஆறுகளுடைய வெள்ளங்களை முழுமையும் சமுத்திரம் அடக்கிக்கொள்வதுபோல இராமர் தமது பாணங்களால் அடக்கினார். வச்சிராயுதத்தால் தாக்கப்பட்ட பெரியமலை எவ்வாறு வருத்தமடையாதோ அதுபோல இராமருடைய தேகம் அரக்கர்கள் செலுத்திய பயங்கரமான காந்தியுடைய ஆயுதங்களால் பிளக்கப்பட்டும் கொஞ்சமேனும் வருத்தத்தை அடையவில்லை. ஆனால், மெய்ம்முழுதும் ஆயுதங்கள் பாய்ந்து இரத்தமோடிக்கொண்டிருந்த இராமர் சாயங்காலத்தில் சிவந்த மேகங்களால் மூடப்பட்ட சூரியன் போலவிளங்கினார். இம்மாதிரி அநேக ஆயிரம்அரக்கர்கள் இராமர் ஒருவரைச் சூழ்ந்து போர் புரிவதைத் தேவர்களும், கந்தர்வர்களும், சித்தர்களும் பெரிய ரிஷிகளுங் கண்டு துக்கப்பட்டார்கள். பிறகு இராமர் வெகுகோபங்கொண்டு தமது வில்லைச் சக்கரமாகவளைத்து அதினின்று ஒருவராலுந் தடுக்கமுடியாதனவும், சகிக்க முடியாதனவும், காலபாசத்துக் கொப்பாயினவும், கழுகின் இறகு கட்டப்பட்டனவும், பொற்கட் டமைந்தனவுமான அநேக பாணங்களை நூற்றுக் கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் விளையாட்டுப்போல விடுத்தார். அவ்வாறு இராமரால் விளையாட்டாக விடப்பட்ட பாணங்கள் காலனால் வீசப்பட்ட பாசங்கள்போல அரக்கர்களுடைய உயிர்களை உறிஞ்

சத் தலைப்பட்டன. அவைகள் ராக்ஷசர்களுடைய தேகங்களைப் பிளந்து அவர்களுடைய இரத்தத்தில் தோய்ந்து ஆகாசத்தில் கிளம்பும்பொழுது கொழுந்துவிட்டெரியும் அக்கினியைப்போல விளங்கின. ராக்ஷசர்களுடைய பிராணன்களைப் போக்க இராமருடைய கூர்மையான பாணங்கள் அவருடைய வில்லிலிருந்து கணக்கில்லாமல் வெளிப்பட்டுக்கொண்டிருந்தன. அவைகளால் அவர் அன்று நடந்த யுத்தத்தில் அரக்கர்களுடைய விற்களையும், கொடியின் நுனிகளையும், கவசங்களையும், தலைகளையும், ஆபரணங்களணிந்த தோள்களையும், யானைத்துதிக்கையை ஒத்த துடைகளையும் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் துணித்தெறிந்தார். அன்றியும், சாரதிகளுடன் அழகாகப் பொன்னால் அலங்கரிக்கப்பட்டு இரதத்தில் பூட்டியிருந்த குதிரைகளையும், பாகர்களுடன் யானைகளையும், குதிரைகளுடன் குதிரை வீரர்களையும், காலாட்களையும் இராமர் கொன்று, எல்லாரையும் யமன் மாளிகைக்கனுப்பினார். வெகுகூர்மையான முனைகளும் கொழுக்கிகளுமுடைய நாளீகம், நாராசம் என்ற பாணங்களால் தேகம் முழுமையும் பிளக்கப்பட்ட ராக்ஷசர்கள் வருத்தமடைந்து பயங்கரமாகக் கதறத் தலைப்பட்டார்கள். அரக்கர்சேனை இவ்வண்ணம் இராமருடைய கூர்மையான சரங்களால் துணிபட்டுத் தீப்பட்டெரியும் உலர்ந்த காடுபோல் சிறிதும் சௌக்கியம் அடையவில்லை. பயங்கரமான பலம்பொருந்திய அரக்கவீரர்கள் இராமர்முன் ஓடிவந்து நின்று அவர்மேல் சூலங்களையும், கத்திகளையும், கோடரிகளையும்வீசினார்கள். புஜபராக்கிரமமுள்ள மகாவீரரான இராமர் அவைகளைத் தமது பாணங்களால் மாற்றி யுத்தத்தில் அவர்களுடைய தலைகளை அறுத்து உயிரையும் வாங்கினார். அரக்கர்கள் தலையறுபட்டுக் கவசங்களும் விற்களும் துண்டிக்கப்பட்டுக் கருடனுடைய இறக்கைகளின் காற்

இராமர் ராக்ஷசர்களைக் கொல்லல.

ளுல் விருக்ஷங்கள் சாய்ந்தாற்போலப் பூமியில் விழுந்தார்கள். இவ்வண்ணம் அநேகராக்ஷசர்கள் மடிந்தபிறகு மிகுந்திருந்த அரக்கர்கள் இராமரால் விடுக்கப்படும் பாணங்களைச் சகிக்கமுடியாமல் வருந்தி, வெகுதுயரமடைந்து, கரனிடமோடி அவனைச் சரணமடைந்தார்கள். அவர்களெல்லாரையும் தூஷணன் மறுபடி திரட்டித் தைரியப்படுத்தி, தன்வில்லை எடுத்துக்கொண்டு கோபங்கொண்ட யமனைப்போல இராமரை எதிர்த்து அதிவேகமாக ஓடி வந்தான்.

தூஷணன் இராமரை எதிர்த்தல்.

முதலில் அடிபட்டுத் திரும்பிவந்த அரக்கர்கள் தூஷணனுடைய சார்பால் பயமொழிந்து ஆச்சா, பனை, பாறை முதலியவைகளைக் கைகளில் எடுத்துக்கொண்டு இராமரைநோக்கி ஓடினார்கள். மகாபலம்பொருந்திய சிலர் சூலம், கதை, பாசங்களைக் கைகளில் எடுத்துக்கொண்டு இராமர்மேல் பாணங்களையும் மற்ற ஆயுதங்களையும் மழைபொழிவதுபோலப் பொழிந்தார்கள். சிலர் மரங்களைக் கணக்கில்லாமல் பிடுங்கி வீசினார்கள். வேறுசிலர் பாறைகளையும் மலைகளையும் பிடுங்கி வருஷித்தார்கள். இராமருக்கும் அவ்வரக்கர்களுக்கும் பார்ப்பவர்கள் மயிர்க்கூச்செறியும்படியாக ஆச்சரியமும் பயங்கரமுமான யுத்தம் அன்று நேர்ந்தது. அரக்கர்கள் எல்லாரும் வெகுகோபமடைந்து இராமரை மறுபடியும் நான்கு பக்கங்களிலேயும் சுற்றிக்கொண்டார்கள். அவ்வாறு தம்மைச் சுற்றிக் கொஞ்சமேனும் இடைவெளியில்லாமல் எண்டிசைகளிலும் பாணங்களைப் பொழிந்துகொண்டு ராக்ஷசர்கள் நிற்பதை வெகு பலசாலியான இராகவர் கண்டு, கோபங்கொண்டு, பயங்கரமாகக் கர்ச்சித்து, அவர்கள்மேல், அதிககாந்தியை உடைய கந்தர்வாஸ்திரத்தைத் தொடுத்தார். உடனே சக்கரம்போல வளைந்த அவருடையவில்லினின்றும் பாணங்கள் ஆயிரக்கணக்காக வெளிப்பட்டன. பத்துத்திசைகளிலும் இராமருடைய பாணக்கூட்டங்கள் 'வெள்ளிடை

பின்றி நிரம்பின. இராமருடைய பாணங்களால் மாண்ட அரக்கர்கள் அவர் பாணங்களை எவ்விதமாக எடுத்து வில்லில் தொடுத்துவிட்டார் என்பதை அறியவில்லை. இராம பாணங்களால் உண்டான இருள் ஆகாசத்தையும் சூரியனை யும் மூடினது. இராமர் மேலும்மேலும் பாணங்களைச் சொரிந்துகொண்டே நின்றார். பாணங்கள் வில்லைவிட்டுக் கிளம்பியதும், அரக்கர்களை வதைத்ததும், அரக்கர்களுடல் பூமியில் விழுந்ததும் எல்லாம் ஓரே காலத்தில் உண்டாயின. பாணங்களாலும ராக்ஷசப் பிணங்களாலும பூமி மூடுண்டது. இராமருடைய பாணங்களால் துளைக்கப்படடும், குத்தப்படடும், பிளக்கப்பட்டும், தறிக்கப்பட்டும் ஆயிரக்கணக்காய் உயிரிழந்த ராக்ஷசர்கள் அங்கங்கு காணப்பட்டார்கள். அப்பொழுது போர்க்களம் தலைப்பாகை தரித்த தலைகளாலும, அங்கதங்க ளணிந்த புஜங்களாலும், பற்பல ஆபரணங்களாலும், அறுபட்ட முழங் கால்களாலும, துடைகளாலும், பிளக்கப்பட்ட குதிரைகளாலும், யானைகளாலும, அநேக இரதங்களாலும், துவஜங்களாலும், சாமரைகளாலும, குடைகளாலும், ஆலவட்டங்களாலும், இராமபாணத்தால துண்டிக்கப்பட்ட அநேகவித சூலஙகளாலும், படடிசங்களாலும், கத்திகளாலும், சிதறுண்ட பிராசங்களாலும், கோடரிகளாலும், துகளாக்கப்பட்ட கற்களாலும், சேதிக்கப்பட்ட அநேகவித பாணங்களாலும் நிறைந்து பயங்கரமாகவிருந்தது.

இருபத்தாறுஞ்சருக்கம்.

தூஷணன வதை.

தனது சைநியங்கள் இவ்வாறு கொல்லப்பட்டதைத் தூஷணன் பார்த்து வெகு வேகமுடையவர்களும் பராக்

கிரம முள்ளவர்களும், எளிதில் வெல்ல முடியாதவர்
களும், போர்முகத்தில் புறங்காட்டாதவர்களுமான ஐயா
யிரம் அரக்கர்களை இராமருடன் போர்செய்யக் கட்டளை
யிட்டான். அவர்கள் நான்குபக்கங்களிலும் சூழ்ந்து
கொண்டு இடைவிடாமல் இராமர்மேல் பாணங்களையும்,
சூலங்களையும், பட்டிசங்களையும், கத்திகளையும், மலைகளை
யும், மரங்களையும் மழைபொழிவதுபோலப் பொழிந்தார்
கள். உயிரை அழிக்கவல்ல மலை மரங்களின் வருஷத்
தைத் தர்மாத்துமாவாகிய இராமர் பாணங்களால் மாற்றி
னார். அம்மரமாரியைத் தடுத்துவிட்டு ரிஷபம்போன்ற
இராமர் அரக்கர்களை யெல்லாரையும் வதை செய்யவேண்டு
மென்று கண்களை விழித்துப்பார்த்துப் பெருங் கோப
மடைந்தார். அவ்விதமாக அவர் கோபங்கொண்டு,
கொழுந்துவிட்டெரியும் தீப்போல விளங்கி, தூஷணன்
மேலும் அவன் சைநியத்தின்மேலும் சரமாரிபொழிந்தார்.
அதைக்கண்டு அரக்கர் படைத்தலைவனாகிய தெவ்வரை
அழிக்கும் திறமுள்ள தூஷணன் கோபங்
கொண்டு இடிக்கொப்பான பாணங்களை
இராமர்மேல் விடுத்தான். இராமர்

தூஷணன் யுத்தம்.

சினந்து அரிவாள்போன்ற கூரிய பாணங்களால் அவனது
பாரமான வில்லை வெட்டி நான்கு பாணங்களால் அவ
னுடைய நான்கு குதிரைகளையுங் கொன்றார். குதிரை
களைக் கொன்றபின் அவர் ஓர் அர்த்தசந்திரபாணத்தால்
சாரதியின் தலையைவெட்டி, இரண்டு பாணங்களைத் தூஷ
ணன் மார்பின்மேல் எய்தார். வில்லற்று, இரதம் அழிந்து,
குதிரைகளும் சாரதியும் மாண்டு நின்ற தூஷணன்,
மலையின் சிகரத்தை நிகர்த்ததும், பொற்பூணமைந்ததும்,
தேவர்கள் படையை நாசம் பண்ணக்கூடியதும், கூர்மை
யான இருப்பாணி தைக்கப்பட்டதும், அநேக சத்துருக்
களைக் கொன்று அவர்களுடைய கொழுப்பு வழியப்
பெற்றதும், வச்சிராயுதம்போல் வலியமைந்ததும், பகை

வர்களுடைய நகரங்களைத் துகளாக்கும் ஆற்றலுடையதும், மகாநாகம் போன்றதுமான கதை ஒன்றை எடுத்துக் கொண்டு வெகு கொடிய எண்ணத்துடன் இராமரைநோக்கி ஓடினான். அவ்வாறு ஓடிவரும் அக்கொடிய அரக்கனுடைய ஆபரணங்கள் பூண்ட கைகளிரண்டையும் இராமர் இரண்டு பாணங்களால் கண்டங்கண்டார். அப்போது கைகளிலிருந்து நழுவிய திண்ணிய கதை இந்திரன் கொடி அறுபட்டு விழுந்ததுபோலப் போர்க்களத்தில் விழுந்தது. மருப்பொசிந்த மதயானைபோலத் தூஷணன் இரண்டு கரங்களும் வெட்டுண்டு போர்க்களத்தில் சுருண்டு விழுந்தான். அவன் மாண்டுவிழுந்ததைக் கண்ட பிராணிகளெல்லாம் "நல்லகாரியம், நல்லகாரியம்" என்று இராமரைத் தோத்திரம் பண்ணின. அப்போது சேனைத் தலைவர்களான மகாகபாலன், ஸ்தூலாக்ஷன், மகாபலம் பொருந்திய பிரமாதி என்பவர்கள், காலனுடைய பாசத்தில் அகப்பட்டுக்கொண்டு கோபமடைந்து, இராமரை எதிர்த்தார்கள். மகாகபாலன் ஒரு பெரிய சூலத்தையும், ஸ்தூலாக்ஷன் ஒரு பட்டிசத்தையும், பிரமாதி ஒரு கோடரியையும் எடுத்துக்கொண்டு சென்றார்கள். இவ்விதமாகத் தம்மை நோக்கி ஓடிவரும் அரக்கர்களை, வீட்டுக்குவரும் விருந்தினரை முகங்கொண் டழைக்குமாறுபோல, இராமர் தமது கூரிய பாணங்களைச் செலுத்தி உபசரித்தார். அவர் மகாகபாலனுடைய தலையைப் பிளந்து, பிரமாதியின் உடலில் அளவில்லாத பாணங்களை அழுத்தி, ஸ்தூலாக்ஷனுடைய கண்களைக் கூர்மையான பாணங்களால் பொத்தினார். அவர்கள் அடியற்றமரம்போல் பூமியில் விழுந்தார்கள். அவ்வாறே தூஷணனுடைய ஐயாயிரம் போர் வீரர்களையும் இராமர் கோபங்கொண்டு ஐயாயிரம் பாணங்களை விடுத்து யமனுடைய மாளிகைக் கனுப்பினார். தூஷணன் மாண்டதையும் அவனைச்சேர்ந்த ஐயாயி

தூஷணன் வதை.

ரம் வீரர்கள் மடிந்ததையும் கரன்கண்டு மகாபலம்பொருந்திய தனது சேனைத் தலைவர்களை நோக்கி "அற்ப மானிடனுன இராமனுல் தூஷணனும் அவனைச்சேர்ந்த வீரர்களும் பெருஞ்சேனையுடன் போரில் கொல்லப்பட்டார்கள். ஆகையால், நீங்களெல்லீரும் பலவிதமான ஆயுதங்களைச் செலுத்திச் சீக்கிரம் இராமனை எப்படியாவது கொன்றுவிடுங்கள்" என்று கட்டளையிட்டான். இவ்விதமாகச் சொல்லிவிட்டுக் கரன் வெகுகோபமாக இராமரை நோக்கிச் சென்றுன். அவனுடைய சேனைத்தலைவர்களான மகாபலம் பொருந்திய சியேனகாமி, பிருதுக்கிரீவன், யச்ஞசத்துரு, விஹங்கமன், துர்ஜயன், கரவீராக்ஷன், பருஷன், காலகார்முகன், மேகமாலி, மகாமாலி, ஸர்ப்பாசியன், உதிராசனன் என்னும் பன்னிருவர்களும் தங்கள் சேனைகளோடு எதிர்த்துச்சென்று இராமர்மேல் உத்தமமான சரங்களைச் சொரிந்துநின்றுர்கள்.

சேனைத்தலைவர் வதை.

இவ்வண்ணம் தன்னேடு போருக்குவந்த கரனுடைய எஞ்சியபடையை வெகு காந்தியையுடைய இராமர் தங்கமும் வைரமும் இழைக்கப்பட்டு அக்கினி போலப் பிரகாசிக்கும் தமது பாணங்களால் வதைத்தார். புகையற்ற நெருப்புப்போலஜ்வலிக்கும் பொன்னிழைத்த அப்பாணங்கள், இடிகள் பெருமரங்களை நாசம் பண்ணுவதுபோல, அவ்வரக்கர்களை நாசம்பண்ணின. ஒரே தடவையில் இராகவர் நூறு ராக்ஷசர்களை நூறுகர்ணிகளை விடுத்தும் ஆயிரம் அரக்கர்களை ஆயிரம் கர்ணிகளைவிடுத்தும் மாய்த்தார். இவ்விதமாகப் போர்க்களத்தில் இராமபாணங்களால் தங்கள் கவசங்கள் பிளந்து, ஆபரணங்கள் குலைந்து, விற்கள் சின்னபின்னமாய் ஒடிந்து, மெய்யெல்லாம் இரத்தம் வழிய, அரக்கர்கள் மாண்டுவிழுந்தார்கள். தலைமயிரவிழ்ந்து தேகம் முழுதும் இரத்தம் ஒழுக மாண்டுகிடந்த ராக்ஷசர்களால் அப்போர்க்களம் தருப்பைப்புற்கள் பரப்பப்பட்ட வேதிகைபோல விளங்கிற்று.

அப்போது ராக்ஷசப்பிணங்கள் நிறைந்து இரத்தத்தாலும் நிணத்தாலும் சேறாகவிருந்த அப்பயங்கரமான காடு நரகத்துக்கொப்பாக இருந்தது. பயங்கரமான செயல்கள் புரிந்துவந்த பதினாலாயிரம் அரக்கர்கள் இவ்வண்ணம் பதாதியாகப் பொருத மானிடராகிய இராமரொருவரால் மடிந்தார்கள். அப்பெருஞ்சேனையில் மிகுந்தவர்கள் மகாரதனான கரனும் திரிசிரனுமே. இவர்களுக்கெதிராகத் தெவ்வரேறாகிய இராமர் நின்றார். கொடிய பாவிகளும், மகா பலம்பொருந்தியவர்களுமான மற்றைய அரக்கர்களெல்லாம் போர்க்களத்தில் லக்ஷ்மணருக்கு முன்பிறந்த இராமர் கையால் மாண்டார்கள்.

இவ்வாறு பெரும்போரில் மகாபலத்தையுடைய இராமர் அரக்கர்களுடைய பெரும்படை முழுதையும் கொன்றதைக் கரன் கண்டு ஒரு பெரிய இரதத்தில் ஏறி வச்சிராயுதத்தைக் கையிற்பிடித்துச் செல்லும் இந்திரன்போல இராமர்முன் சென்றான்.

இருபத்தேழாஞ்சருக்கம்.

திரிசிரன் வதை.

கரன் அவ்வாறு இராமரை எதிர்த்துச்செல்லுவதை அவனுடைய சேனைத்தலைவனான திரிசிரன் பார்த்து அவனிடமோடிவந்து பின்வருமாறு சொன்னான் :—"என்னை, இக்காரியத்தைச் செய்யக் கட்டளையிடு. இதில் நீ புக வேண்டாம். நான் பலம்பொருந்திய இராமனைப் போரில் வீழ்த்துவதை நீ பார். நான் என் ஆயுதத்தைத் தொட்டுச் சத்தியம் பண்ணிச் சொல்லுகிறேன். ராக்ஷசர்கள் எல்லாராலும் வதைக்கப் படவேண்டிய இராமனை நானே வதைக்கிறேன். நான் அவனுக்குப் போரில்

யமனுகிறேன். அல்லது அவனுவது எனக்கு யமனுகட்டும். ஆகையால், நீ இப்போது சண்டைசெய்யவேண்டுமென்ற விருப்பத்தை அடக்கிக்கொண்டு எங்களிருவருக்கும் நடக்கும் சண்டையை நின்று பார். பின்பு இராமன் மாண்டதைக்கண்டு களித்து ஜனஸ்தானத்துக்குத் திரும்பு; அல்லது நான் மாண்டபிறகு அவனுடன் சண்டைசெய்யப் போர்க்களத்திலிறங்கு." இவ்வாறு திரிசிரன் தனக்கு மரணகாலம் நெருங்கிவிட்டதாற் சொன்ன சொல்லைக் கரன் கேட்டுச் சந்தோஷமடைந்து "அப்படியேயாகுக; நீ முதலில் யுத்தத்துக்குச் செல்" என்று சொல்லவே, திரிசிரன் இராமரோடு போர்புரியப் போயினுன். குதிரை பூட்டப்பட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்த தனது இரதத்திலேறி மூன்று சிகரங்களையுடைய மலையொன்று செல்லுவதுபோலத் திரிசிரன் இராமரை எதிர்த்துச் சென்றுன். அவன் ஒரு பெரிய மேகம் மழையைக் கொட்டுவதுபோலச் சரமாரியைப் பொழிந்து நீரில் நனைந்த துந்துபி ஒலிப்பது போலப் பேரொலி செய்தான். அவ்வாறு தம்மை நோக்கிவரும் அரக்கனை இராகவர் கண்டு கூர்மையான அப்புகளால் அவனைத் தாக்கினுர். அவ்விருவர்களுடைய யுத்தம் வெகு பலம்பொருந்திய யானையும் சிங்கமும் போர்புரிந்ததுபோலத் தோன்றிற்று. பின்பு திரிசிரன் இராமர் நெற்றியில் மூன்று கூர்மையான அம்புகளை எய்தான். அதைக்கண்டு இராமர் வெகு கோபம் அடைந்தபோதிலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவனைப் பார்த்து "ஆச்சரியம்! ஆச்சரியம்! வெகு பராக்கிரமசாலியாகவும் சூரனுகவுமிருக்கும் ராக்ஷசனுடைய பலம் எவ்வளவு அதிகம்! உன்னுடைய பாணங்கள் என் நெற்றியில் புஷ்பங்கள் பண்ணுங் காயத்தைப்

திரிசிரன் யுத்தம்.

பண்ணிவிட்டன! நானிப்பொழுது என் வில்லிலிருந்து விடுக்கும் பாணங்களை நீ ஏற்றுக்கொள்" என்று சொல்லி, சர்ப்பங்களுக் கொப்பான பதினன்கு பாணங்களை வெகு கோபத்துடன் திரிசிரன் மார்பில் எய்தார். அன்றியும், கொஞ்சம் சாய்ந்த முனைகளுள்ள நான்கு பாணங்களை விடுத்துப் பராக்கிரமசாலியாகிய இராகவர் அவ்வரக்கனுடைய நான்கு குதிரைகளையும் கீழே விழச்செய்தார்; எட்டுப் பாணங்களைச்செலுத்தி இரதத்தில் முற்புறத்தில் உட்கார்ந்திருந்த சாரதியை வீழ்த்தினர்; ஒரு பாணத்தால் இரதத்தின்மேல் கட்டியிருந்த கொடியைத் துண்டித்தார். பின்பு, உடைந்துபோன ரதத்தை விட்டிறங்கி ஓடிவரும் திரிசிரனுடைய மார்பில் அவர் அநேக பாணங்களை எய்தார். அவைகளைச் சகிக்கமுடியாமல் அவன் மயக்கங்கொண்டான். அதன்பிறகு வெகுவேகமாகச் செல்லும் மூன்று கூர்மையான அம்புகளை,

திரிசிரன வதை.

ஸ்வரூபத்தை அறியக்கூடாத இராகவர், வெகு கோபத்துடன் விடுத்து, அவ்வரக்கனுடைய மூன்று தலைகளையும் கொய்தெறிந்தார். அவனும் இராமபாணங்களால் வெட்டுண்டு உயிரிழந்து தன் தலைகள் முன்னேவிழத் தானும் இரத்தத்தைக் கக்கிக் கொண்டு பூமியில்விழுந்தான். இன்னும் மிகுந்திருந்த கரனுடைய சைநியத்திலுள்ள அரக்கர்கள், புலியைக்கண்டு பயந்தோடும் மான்கள்போல, போர்க்களத்தில் நிற்காமல் ஓடினர்கள். அவ்வாறோடுகின்றவர்களைக் கரன் வெகு கோபத்துடன் திருப்பி, சந்திரனை எதிர்த்து இராகு ஓடுவது போல, இராமரை எதிர்த்துப் போனன்.

இருபத்தெட்டாஞ்சருக்கம்.

இராமர் கரனுடைய தேரை அழித்து அவன் சாரதியைக் கொன்றது.

திரிசிரனுடன் தூஷணனும் யுத்தத்தில் மாண்டதைக் கண்ட கரன் இராமருடைய பராக்கிரமத்தைப் பார்த்துப் பயந்தான். மகாபலம்பொருந்திய கரன் யாரும் நெருங்க முடியாத தனது பெரிய அரக்கர் படையும் திரிசிர தூஷணர்களும் இராமர் ஒருவரால் மாண்டதைக்கண்டு துன்புற்று, நமுசி இந்திரனை எதிர்த்துச் சென்றதுபோல, இராமரை எதிர்த்துச்சென்றான். கரன் தனது பலமான வில்லை நாணேற்றி இரத்தத்தில் தோய்ந்து கோபங்கொண்ட விஷசர்ப்பங்கள்போல் விளங்கும் பாணங்களை இராமர்மேல் விடுத்தான்.

கரன் யுத்தம்.

அவன் தேரிலேறி, அடிக்கடி நாணையிழுத்துத் தெறித்துக்கொண்டு, ஆயுதப் பயிற்சி மிகுதியின் செருக்கால் ஆயுதங்களை வெளியில் காட்டிக்கொண்டு, போர்க்களத்தில் சுற்றித்திரிந்தான். அன்றியும், மகாரதனன கரன் எண்டிசைகளையும் தனது பாணங்களால் மூடினான். அதை இராமர் பார்த்துத் தமது பாரவில்லைக் கையிலெடுத்து, மேகம் மழையைப் பொழிவதுபோல, நெருப்புப் பொறி கக்குகின்ற சகிக்க முடியாத பாணங்களைப் பொழிந்து, ஆகாசத்தைக் கொஞ்சமேனும் இடைவெளி இல்லாமல் மறைத்துவிட்டார். இவ்விதமாக இராமரும் கரனும் விடுத்த கூரிய பாணங்களால் ஆகாயம் முழுதும் எல்லாப் பக்கங்களிலும் மூடப்பட்டது. இருவரும் ஒருவரோடொருவர் சினந்து யுத்தம் பண்ணும்பொழுது பாணங்களின் சமூகத்தில் மறைந்து சூரியன் பிரகாசிக்கவில்லை.

கரன், கொஞ்சம் வளைந்த கூரிய முனையுள்ள நாளீகம், நாராசம் என்ற பாணங்களால், மகாகஜத்தைத் தாற்றுக்கோலால் குத்துவதுபோல, இராமரைத் தாக்கி

னுன். அன்றியும் அவ்வரக்கன் கையில் வில்லுடன் இரதத்தில் உட்கார்ந்திருந்தது, கையில் பாசத்தைப்பிடித்துவந்த யமன்போல், எல்லாப் பிராணிகளுக்கும் தோன்றிற்று. தனது படை முழுவதையுங் கொன்ற இராமர் வெகு பராக்கிரமசாலி என்றுலும், அவர் அப்பொழுது கொஞ்சம் களைத்திருந்ததாகக் கரன் எண்ணினுன். சிங்கம் போலச் செருக்கடைந்து நடந்த கரனை இராமர் பார்த்து ஒரு சிங்கமானது அற்ப மிருகத்தை எவ்வாறெண்ணுமோ அவ்வாறு கருதினுர். அவ்வண்ணம் நிற்கும் இராமரோடு, அந்துப்பூச்சி நெருப்பில் விழுவதுபோல, கரன் தனது சூரியனுக்கொப்பான பெரிய ரதத்துடன் போர்புரிய வந்து சேர்ந்தான். உடனே அவன் தனது கைவன்மையைக் காட்டும் விதமாக மகாத்துமாவாகிய இராமர் பிடித்திருந்த வில்லை அதில் பூட்டிய அம்புடன் இரண்டாக வெட்டினுன். மறுபடி அவன் இடிக்கொப்பான ஏழு பாணங்களை எடுத்து வெகு கோபத்துடன் இராமருடைய மர்மஸ்தானங்களை நோக்கி விடுத்தான். சூரியனுக்கொப்பான பிரகாசமுடைய இராமருடைய கவசம் அப்பாணங்களால் வெட்டுண்டு கீழேவிழுந்தது. அதன்மேல் கரன் ஆயிரம் பாணங்களை ஒப்பறற பராக்கிரமமுள்ள இராமர்மேல் விடுத்து அட்டகாசம் பண்ணினுன். அப்பாணங்களால் தேகம் முழுதும் அடியுண்டு வெகு கோபங்கொண்டு போர்க்களத்தில் நின்ற இராமர் புகையற்ற அக்கினிபோல விளங்கினுர். பிறகு, சத்துருக்களை அடக்கும் இராமர் தமது பகைவனுகிய கரனை உடனே முடித்துவிடக்கருதி வெகு கம்பீரமாக ஒலிக்கும் மற்றொரு வில்லை எடுத்து நாணேற்றினுர். அது விஷ்ணுவின் வில்; அகஸ்தியரால் இராமருக்குக் கொடுக்கப்பட்டது. புகழ்பெற்ற அந்த வில்லை இராமர் கையிலெடுத்துக்கொண்டு கரனை எதிர்த்தார். கொஞ்சம் வளைந்த முனைகளும்

இராமருடைய வில வெட்டுப பட்டது.

பொன் இறகுகளுமுள்ள பாணங்களை இராமர் வெகு கோபத்துடன் விடுத்துக் கரனுடைய கொடியைப் போர்க்களத்தில் அறுத்துத்தள்ளினார். அந்த அழகான தங்கக் கொடி வெட்டுண்டு கீழே விழுந்தது தேவர்களுடைய உத்தரவின்படி சூரியன் பூமியில் விழுந்ததுபோன்றிருந்தது. போரின் தன்மையையறிந்தகரன் அதைக்கண்டு கோபம் கொண்டு, மதயானையைத் தாற்றுக்கோலால் குத்துவது போல, இராமர் மார்பில் நான்குபாணங்களை அழுத்தினான். கரன் வில்லிலிருந்து விடுக்கப்பட்ட பாணங்கள் தைத்துத் தேகமெங்கும் இரத்தமோட நின்ற இராமர் பெருங் கோபங்கொண்டார். உடனே வில்வித்தையில் முதல்வரான இராமர் தமது பாரவில்லைக் கையிலேந்தி நாணேற்றிந்து இலக்காக ஆறுபாணங்களை எய்தார். அவைகளில் ஒன்று கரன் தலையிலும், இரண்டு அவன் கைகளிலும், மற்றைய அர்த்த சந்திரன்போன்ற மூன்று பாணங்கள் அவன் மார்பிலும் தைத்தன. பிறகும் அதிக பராக்கிரமமுள்ள இராமர் பெருங்கோபங்கொண்டு கரன்மேல் சூரியனுக்கொப்பான பதின்மூன்றுபாணங்களை விடுத்து, ஒன்றால் அவனது இரதத்தின் நுகத்தடியையும், நான்கு பாணங்களால் நான்கு குதிரைகளையும், ஆறாவது பாணத்தால் சாரதியின் தலையையும், மூன்று பாணங்களால் இரதத்தின் பாரையும், இரண்டு பாணங்களால் அச்சையும், வச்சிராயுதத்துக்கொப்பான பன்னிரண்டாவது பாணத்தால் அவனுடைய வில்லையும் வெட்டி, பதின்மூன்றாம் பாணத்தால் அவன் உடலையும் விளையாட்டாகத் துளைத்தார். அப்பொழுது கரன் வில்முறிந்து, இரதமழிந்து, குதிரைகளும் சாரதியும் மாண்டு, கையில் கதையை எடுத்துக்கொண்டு தரையில் குதித்தான்.

கரன தோழிக்கது.

மகாரதராகிய இராமர் இவ்வாறு செய்த ஆச்சரியமான காரியத்தைத் தேவர்களும் மகரிஷிகளும் கண்டு

களித்துக் கைகூப்பித் தங்கள் தங்கள் விமானங்களிலிருந்தபடியே அவரைத் துதித்தார்கள்.

இருபத்தொன்பதாஞ்சருக்கம்.

இராமர் கரனுடைய பாவங்களைக்கூறி அவன் கதையைத் துண்டித்தது.

இரதமற்றுக் கதாபாணியாகத் தம்முன்வந்து நின்ற கரனைப்பார்த்து அதிக தேஜசுடன் விளங்கும் இராமர் வெகு மிருதுவாக அவன் கொடிய செயல்களையெடுத்துக் காட்டினர்:—"இரதகஜதுரகபதாதிகள் நிரம்பிய பெருஞ்சேனையின் உதவியால், நீ உலகத்திலுள்ளார் யாவரும் அருவருக்கத்தக்க கொடிய செயலைச் செய்துவந்தாய். ஒருவன் இம்மூவுலகங்களுக்கும் ஈசனாக இருப்பினும், கொடியவனாகவும் பாவமான காரியங்களைச் செய்கிறவனாகவும் இருந்தால் அவன் க்ஷேமமாக வாழமாட்டான். உலகத்துக்கொவ்வாத கொடிய செயல்கள் செய்யும் பாவியை, கொடிய பாம்பை வதைப்பதுபோல், எல்லாரும் வதைப்பார்கள். எவனொருவன் உலோபத்தன்மையால் பாபங்களைப் பண்ணிக்கொண்டு அதிக இலாபத்தின் இச்சையால் தான் செய்வது பாபமென்றறியாமல் இருக்கிறானோ அவன் ஐஸ்வரியத்திலிருந்து விலக்கப்பட்டவனாய், ஆலங்கட்டியைப் புசித்து அறணை மாண்டுவிடுவது போல, சீக்கிரம் மாள்வான். தருமத்தை நடத்திக்கொண்டு தண்டகாரணியத்தில் வசித்துவரும் தபசிகளைக் கொன்றதனால் உனக்கு என்ன இலாபம்? உலகத்தார் வெறுக்கும் கொடிய செய்கைகளைச் செய்யும் பாவிகள் ஒருபொழுதும் க்ஷேமமாக இருக்கமாட்டார்கள்; வேரற்ற விருக்ஷம்போல் அழிந்துவிடுவார்கள். விருக்ஷங்கள் பருவத்தில் புஷ்பிப்பதுபோல, பாவத்தொழிலைச்செய்பவன் ஒவ்வொருவனும்

இராமர் கரனை இகழ்தல்.